கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்
மறை வளர ஒன்றிணைவோம்

# தாய்




கத்தோலிக்க சஞ்சிகை - ஆரம்பம் 1997

2024

ஆவணி – கார்த்திகை தாய்–27 சேய்–166






வெளியீடு – கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம். தொ.பே (0094) 777 289960 விலை–60/-

இந்திய கன்னட மாநிலத்தை சேர்ந்தவரும் நமது நாட்டிற்கு பல தடவைகள் வருகை தந்து எமது மக்களை ஆன்மீகத்தில் வழி நடத்தியவருமான

**சகோதரர். ஜோர்ஜ் தரகனின்**

மறைவு பலரையும் குறிப்பாக கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றத்தையும் ஆழ்ந்த துயரில் ஆழ்த்தியது. சகோதரன் இவ்வுலகில் இருந்து விடை பெற்றாலும் அவரது பணி எம் மூலமாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அவர் விட்டுச் சென்ற பணிகளில் அவர் இன்னும் வாழ்கின்றார். நாம் அவர் நித்திய இளைப்பாற்றி அடைய அவருக்காக மன்றாடுவோம்.



**சகோதரர். ஜோர்ஜ் தரகன்**
பிறப்பு – 08.09.1955 இறப்பு – 14.10.2024

**கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின் உறுப்பினர்களாக இருந்து இவ்வாண்டு இறைபதம் அடைந்த உறுப்பினர்களை நன்றியோடு நினைவு கூர்கின்றோம்.**

அமரர்
திரு. X.I.கொஸ்தா





அமரர்
திரு. J.P.G.டேவிட்



அமரர்
செல்வன்.ஜோஸ்வா கிலாட்சன்

அமரர்
திரு.ஜோசப்வாஸ்





“என்னைத் தயக்கம் இன்றி ஏற்றுக் கொள்வோர் பேறு பெற்றோர்.”

# தாய் THAAI

## எமது எண்ணம்

August - November 2024
P.O. Box: 1233, Colombo
Mobile: 077 7289960
e.mail:anandapulle@yahoo.com
anandapulle@hotmail.com
www.colombostjosephvazmandram.lk


ஆண்டவர் இயேசுவின் பிறப்பின் 2025 ஆவது ஜூபிலி ஆண்டை நோக்கி பயணித்துக் கொண்டு இருக்கிறோம். இது எமது விசுவாச வாழ்வின் ஆழத்தையும் அர்த்தத்தையும் எடுத்துக்காட்டுகிறது. இந்த விசுவாசப் பயணம் ஆண்டவருடைய பிறப்பு, வாழ்வு, போதனை, பாடுகள், மரணம், உயிர்ப்பை மையமாகக் கொண்டது. அது மட்டுமல்ல ஆண்டவருக்கு சாட்சிகளாக வாழ்ந்த புனிதர்கள், இரத்தம் சிந்தி மரித்த மறை சாட்சிகளுடைய வாழ்வும், தூய ஆவியின் துணையோடு திருச்சபையின் வழிநடத்தலும் இப்பயணத்தின் ஈடு இணையற்ற முக்கிய அம்சங்களாகும். இந்த விசுவாச பயணத்தில் எமது பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்து பார்க்க வேண்டும். எம் ஒவ்வொருவரின் முன்மாதிரிகையான கிறிஸ்தவ வாழ்வு இந்த ஜூபிலி ஆண்டை மெருகூட்டுகிறது. இந்த ஜூபிலி ஆண்டை முன்னிட்டு தாய்த் திரு அவையில் மறைமாவட்ட ரீதியாகவும், பங்குத் திரு அவையாகவும் பல நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தனிப்பட்ட ரீதியிலும் குடும்பமாகவும் இந்த ஜூபிலியை தகுந்த முறையில் கொண்டாட ஆயத்தமாகுவோம். கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் புதிதாக திருநிலை படுத்தப்பட்ட அருட்பணியாளர்களுக்கு தாய் சார்பில் எமது வாழ்த்துக்களும் ஜெபங்களும் உரித்தாகட்டும்.

மேலும் புனித ஜோசப் வாஸ் மன்ற அழைப்பில் பல தடவைகள் இலங்கையில் நற்செய்தி பகிர்வு செய்த இந்தியாவை சேர்ந்த எமது பாசத்திற்குரிய சகோ. ஜோர்ஜ் தரகரின் மறைவு எமக்கு அதிர்ச்சியையும் கவலையையும் தருகிறது. இவர் முழுமையாக நற்செய்தி பணிக்காக தன்னை அர்ப்பணித்திருந்தார். இவர் தன்னுடைய பணியால் பலரை ஆண்டவர் பால் ஈர்த்தார் என்பது பலருடைய அனுபவம். அவருடைய ஆன்மா ஆண்டவரில் இளைப்பாற ஜெபிக்கிறோம்.


## தாய் நிர்வாகம்

**பிரதம ஆசிரியர்**
அருட்பணி. ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே
☎ : 0777 289960

**ஆசிரியர்**
அருட்பணி. ஒனாசியஸ் பெர்னாண்டோ
☎ : 0770 090005

**சஞ்சிகை நிர்வாகம்**
திருமதி. டயனா ரமேஸ் - ☎ : 0775 594399
JVM சிரேஷ்ட பெண்கள் குழு

**சஞ்சிகை நிர்வாக ஒருங்கிணைப்பாளர்**
திரு. எனஸ்டன் பெர்னாண்டோ -☎ : 0774 985940
✉ : enestons@gmail.com

**துணை ஆசிரியர்கள்**
திருமதி. சுமதி கோமஸ் - ☎ : 0773 672113
திரு. ஜெயக்குமார் பெர்னாண்டோ - ☎ : 0777 781275

**கணனி வடிவமைப்பு**
Mr. Ferdinand Devota

**இணையத்தளம்**
www.colombostjosephvazmandram.lk

# நீத்தாரை நினைவு கூர்வோம்.

எம்முடன் வாழ்ந்து எம்மைவிட்டு பிரிந்து சென்ற உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் காலம் காலமாக நினைவு கூர்வது எமது பாரம்பரியமாக இடம் பெறுகின்ற நிகழ்வாகும். எமது கத்தோலிக்க திரு அவை நவம்பர் மாதத்தை இறந்த ஆன்மாக்களை நினைவுகூர்ந்து, அவர்களுக்காக மன்றாடி அவர்களின் தண்டனையிலிருந்து விடுவிப்பதற்காக ஒதுக்கி உள்ளது.

மண்ணில் பிறந்து பிறருக்காகவே வாழ்ந்து. அல்லது மறைசாட்சிகளாக வாழ்ந்து அமரத்துவம் அடைந்து பின்னர் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்ட அனைத்து புனிதர்களையும் நவம்பர் மாதம் முதலாம் திகதியும், இரண்டாம் திகதியிலிருந்து மாத இறுதி வரை உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆன்மாக்களை நினைவு கூரும்படி திரு அவை இந்த மாதத்தை ஒதுக்கியுள்ளது. மண்ணில் மானிடனாக அவதரித்த ஒவ்வொருவரும் நிச்சயமாக ஒருநாள் இறப்பைச் சந்தித்தே ஆக வேண்டும். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக நடந்து கொள்கிறார்கள்.

பொதுவாகவே மனிதர்களுக்கு ஆசா பாசங்கள் அதிகம். அனைத்தையும் கட்டியாள வேண்டும் என்று ஆசை. தேவைக்கு அதிகமாக சொத்து சேர்க்க வேண்டுமென்று ஆசை. இவ்வாறான தேவையற்ற ஆசைகளினால் பாவத்துக்கு அடிமையாகி விடுகிறார்கள். பழி பாவங்களில் இறங்கி விடுகிறார்கள். எவ்வளவு பெரிய பணக்காரனாக இருந்தாலும், பெரும் சொத்துகளுக்கு அதிபதியாக இருந்தாலும், இறக்கும் தருவாயில் ஒரு குண்டு மணியைக் கூட அவர்களால் எடுத்துச் செல்ல முடியாது. அணிந்திருக்கும் உள்ளாடை கூட அவர்களோடு செல்லாது. இதனை ஒருவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அதன் நிமித்தம் பாவத்தில் விழுகிறார்கள். இறந்த பின் நரக வேதனை அனுபவிக்கின்றார்கள். புண்ணிய காரியங்களில் ஈடுபட்டவர்கள், தங்கள் நற்கிரிகைகளுக்காக மோட்ச இராச்சியத்தை சுதந்தரித்து கொள்கிறார்கள். உலகில் பிறந்த அனைவரும்



செய்த பாவங்கள், செய்து கொண்டிருக்கும் பாவங்கள், இனி பிறக்கப் போகிறவர்கள் செய்யவிருக்கும் பாவங்கள் அனைத்துக்காகவும் எம்பெருமான் இயேசு பாடுகள் அனுபவித்து, மரித்து, உயிர்நீர்த்தார் என்பதை நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

இயன்ற அளவு பாவத்தை விலக்கி வாழ பழகிக் கொள்ள வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களால் நாம் மேற்கொள்ளும் அற்ப பாவங்கள் நிமித்தம் குறுகிய கால தண்டனையாக உத்தரிக்கிற ஸ்தலத்திற்கு தள்ளப்படுகிறோம். அப்படியானவர்களின் மீட்புக்காக, தான தருமங்கள், திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படுகின்றன. இதனால் வேதனைப்படும் ஆன்மாக்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை காலம் குறைக்கப்பட்டு, அவர்கள் மோட்ச இராச்சிய சுதந்திரத்தை அனுபவிப்பார்கள். இறைவனை முகமுகமாய் தரிசிப்பார்கள்.

இறந்த ஆன்மாக்களை நினைவு கூரும் இவ் வேளையில், நாமும் நமது வாழ்வில் கடந்து வந்த பாதைகளைத் திரும்பிப்பார்ப்போம். எங்கே நாம் தவறு இழைத்துள்ளோம். யாருக்கு நாம் தீங்கு செய்துள்ளோம், யாரையெல்லாம் மனம் நோக செய்துள்ளோம், என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து, நமது வாழ்நாள் பொழுதிலேயே அவற்றையெல்லாம் சீரமைத்து, செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி, இறைவனிடம் அறிக்கையிட்டு, இனி ஒரு போதும் இவ்வாறான கிருத்தியங்களில் ஈடுபடுவதில்லை என்று பிரதிக்கனை செய்து, நீதி நெறியில் வாழ்ந்து நல்லதொரு ஆன்மாவோடு மோட்ச இராச்சியத்திற்குள் பிரவேசிப்போம்.

**-ஜெயக்குமார் பெர்னாண்டோ-**

# திருச்செபமாலையின் மகிமை

கிறிஸ்தவர்களுக்கு என்று சில பொக்கிஷங்கள் இருக்கின்றன. “கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?” என்னும் பழமொழிக்கு ஒப்ப,திருமறை நமக்கு ஆதி தொட்டு,அது ஸ்தாபகம் பெற்று வளர்ச்சி பெற்ற நாள் முதல் இன்று வரை நினைவூட்டும் சில உண்மைகளை நாம் குழி தோண்டி புதைத்துவிட்டோம். இத்தத்துவங்கள், உண்மைகள் என்பன கிறிஸ்தவம் நாளாந்தம் புனிதம் அடையவும், மகிமை அடையவும் நலம் பெறவும் உதவுகின்றன. திருப்பலி, திருச்செபமாலை, சிலுவை அடையாளம் வரைதல் போன்றவை மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதங்கள். நாளாந்தம் இவற்றை பயன்படுத்தினால் மோட்சம் நிச்சயம். உடல் உள நலம் நிச்சயம். இன்று மனிதரிடையே நோயும், குழப்பமும் ஏன்? சந்தோசம் நிலைகுலைய காரணம் என்ன? இந்த அருமையான பொக்கிஷங்கள் நம்மை விட்டு போய்விட்டன. சாத்தான் உள்ளத்திலும், இல்லத்திலும் குடியேறிவிட்டான்.

அற்புதமான திருச்செபமாலை பற்றி சிந்திப்போம். நம்மிலே சிலருக்கு திருச்செபமாலை தியானிப்பவர்கள் என்றால் வயதானவர்கள், இறக்கும் தருவாயில் உள்ளவர்கள் என்ற எண்ணம் உண்டு. செபமாலை தியானத்தை வணக்க மாதம் வைகாசியிலும், செபமாலை மாதமாம் ஐப்பசியிலும், நவநாட்காலங்களில் மட்டும் சொன்னால் போதும் எனும் கொள்கையும், இரவில் தூக்கம் கெட்டுவிட்டால் தூக்கத்தை வரவைக்க அல்லது நீண்ட பயணம் தனியே செய்தால் நேரத்தை கடத்த செய்கின்ற ஒரு செயலாக சிலர் கருதுகின்றனர். செபமாலை தியானத்தை அப்படி கருதிவிட முடியாது.

செபமாலை தியானத்தின் உண்மையான அர்த்தம் என்ன? செபமாலையை நாம் செபமாலை தியானம் எனச் சொல்கிறோமே ஏன்? அதற்குள்ளே பொதிந்திருக்கும் ஆழமான அர்த்தம் என்ன? திருப்பலிக்கும் செபமாலைக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? இறைவார்த்தையில் செபமாலைக்கான ஏதேனும் தடயம் இருக்கிறதா? எனத் தேடல் செய்வது பொருத்தமானது. திருப்பலியில் நிகழ்வது என்ன? திருச்செபமாலையில் நிகழ்வது என்ன? திருப்பலியில் இயேசுவின் பிறப்பிலிருந்து பாஸ்கா மறை நிகழ்வாம் பாடுகள், மரணம், உயிர்ப்பு, விண்ணேற்றம், மறுவருகை வரையுள்ள உண்மைகளை நாம் அடையாள முறையில் ஆழமாக கொண்டாடுகின்றோம். திருப்பலியில் நடைபெறுவது உண்மையான கொண்டாட்டம். கல்வாரி மேட்டில் இரத்தம் சிந்தி ஒப்புக்கொடுக்கப்பட்டது, திருப்பலியில் இரத்தம் சிந்தாமல் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. திருச்செபமாலையிலே இயேசுவின் பிறப்பிலிருந்து முழு வாழ்வுமே மறை நிகழ்வுகளாக தியானிக்கப்படுகின்றன. அதனால் தான் திருப்பலி கொண்டாட்டம் என்றும்



திருச்செபமாலை தியானம் என்றும் அழைக்கப்படுகின்றன. திருச்செபமாலையில் மகிழ்ச்சி, துக்கம், ஒளிநிறை, மகிமை போன்ற மறை நிகழ்வுகளை தியானம் செய்கின்றோம். ஒவ்வொரு மறை நிகழ்விலும் இயேசுவின் வாழ்க்கையை தியானித்து அருள் கேட்பதோடு, அன்னை மரியா எமக்காகவும் எம்மில் நற்பண்புகள் வளர பரிந்துரைக்கவேண்டும் என்றும் செபிக்கிறோம்.

நற்செய்தி நூல்களிலே இயேசு கற்றுத் தந்த செபமும், லூக்கா நற்செய்தியில் அன்னை மரியாளுக்கு மங்கள வார்த்தை சொன்னபோது கபிரியேல் தூதன் வாழ்த்திய **“அருள்மிகு பெற்ற மரியே வாழ்க”** என்பதும், மரியா எலிசபெத்தை சந்திக்க சென்ற போது **“பெண்களுக்குள் ஆசி பெற்றவர் நீரே, உமது வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே”** என்று அன்னை மரியாவை பார்த்து வாழ்த்தியதும் மங்கள வார்த்தை செபத்தில் உள்ளது. இது தவிர திருச்செபமாலையில் தியானிக்கப்படுகின்ற மறைபொருள் ஒவ்வொன்றுமே இயேசுவின் வாழ்வோடு சம்பந்தப்பட்டது. விவிலியத்திலே அவற்றுக்கான தடயங்கள் காணப்படுகின்றன. எனவே முற்றும் முழுதும் வல்லமை கொண்ட திருச்செபமாலையை நாம் அனுதினமும் தனியாகவும், குழுவாகவும், திரு அவையாகவும் சேர்ந்து செபிக்க பழக வேண்டும். செபமாலை செபிப்பதால் அருளும், ஆசீரும், மகிழ்வும் கிடைக்கிறது. சாபம் நீங்குகிறது, சாத்தானின் தந்திரங்கள் தவிடுபொடி ஆகின்றன. நோய் நொடிகள் அகல்கின்றன. செபமாலை மாதாவின் பிரார்த்தனையில் செபமாலையை பரலோகத்துக்குரிய ஏணியாக அன்னை மரியாள் நமக்கு விட்டுச் சென்றார் என்று நாங்கள் செபிக்கிறோம். இன்னுமாக செபமாலை பக்தியை கொண்டிருப்பவருக்கு ஞான ஒளியாக அன்னை விளங்குகிறார் என்று செபிக்கிறோம். இப்படியான மகிமையான அற்புதமான செபமாலையை தினமும் செபித்து அருள் பெறுவோம். அன்னையின் பாதுகாவலை பெற்றுக் கொள்வோம். மோட்சத்திலே நமக்கான இருப்பை அமைத்துக் கொள்வோம்.

ஆக்கம் : அருட்பணி ம. பிராங்டஃவ் IVDEI

சென்ற இதழின் தொடர்ச்சி...

# அகில திரு அவையின் கூட்டொருங்கியக்கமும் இலங்கை திரு அவையின் சவால்களும்.

**05.பெண்கள்,இளையோர்:**
பெண்களை இயேசு தனது சீடத்துவத்தில் இணைத்து இருந்தார். அவரது உயிர்ப்பை முதன் முதலில் சாட்சியாக்கியவரும் ஒரு பெண் தான். எமது திரு அவையின் முடிவெடுக்கும் விடயங்களில் பெண்களின் பங்கு எவ்வாறு உள்ளது? வழிபாடுகளில் முன்னுரிமை என்றால் போதுமா? எமது குருமடங்களின் உருவாக்குதலில் பெண் துறவிகள், பொது நிலையினர் பங்கு எப்படி உள்ளது? எமது பங்குகளில் எத்தனை வீதம் பெண்கள் பங்கேற்கின்றனர்? மறை மாவட்ட ரீதியில், ஆயர் பேரவையில் பெண்கள் பங்கேற்பு எவ்வாறு உள்ளது?

எமது பங்குகள் தொடக்கம் மறை மாவட்ட மற்றும் தேசிய அளவில் இளையோரின் முடிவெடுக்கும் பங்கு எப்படி உள்ளது. இன்னும் இவர்கள் பயன்படுத்துகின்ற நிலையில் இருந்து இளையோருக்கான முன்னணிப் பணிகள் என்ன? LGBTQ சார்பானவர்களுக்கான தொடர்பாடல் பணிகள் எந்தளவில் உள்ளன? எமது உள்நாட்டு போரில் எத்தனையோ இளையோர்கள், காலி முகத்திடல் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தினர்? இது போன்ற இளையோர் உருவாக்கல் எந்தளவில் எம் இலங்கை மண்ணில் உள்ளது?

**06.மனித வளமும் கூட்டொருமையும்:**
எமது திரு அவை அதிக வளம் கொண்ட சபை. மனித வளம், கல்வி வளம், பொருளாதார வளம், ஆன்மீக வளம், என்று நீண்டு கொண்டே செல்கிறது. இங்கே பொது நிலையினரின் வளம் எவ்வளவு அதிகம் உள்ளது? வழிபாடுகளுக்கும் பராமரிப்புகளுக்கும் அப்பால் செல்ல வேண்டும். இப்போது ஆங்காங்கே இறையியல் கற்கை வகுப்புக்கள் உள்ளன. பொது நிலையினரையும் குருக்கள் துறவிகளைப் போல தொடர் உருவாக்க கற்கைகளுக்கு வெளிநாடுகளுக்கும் சிறப்பாக ரோம் போன்ற இடங்களுக்கும் அனுப்ப எண்ணுதலும், திட்டம் தீட்டுதலும் அவசியம். குருக்கள் துறவிகள் உருவாக்கத்தில் போதனாசிரியர்களாக, ஆன்மீக வழிகாட்டிகளாக, உருவாக்கினராக உள்வாங்குவதில் எம்மிடம் உள்ள திட்டங்கள் தான் என்ன?
ஆதித் திருஅவையில் கூட்டொருமையும், பொது உடமையும் செல்வாக்கு செலுத்தியதை எம் அன்பியங்கள் ஊடாக எவ்வாறு முனைப்படுத்தலாம்? என்பதையும் தியானிப்பது அவசியமே. அன்பிய உருவாக்கம் பொது நிலையினர் உருவாக்கம் என்பதை உணர்ந்து ஒவ்வொரு திரு அவையும் முதன்மைப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதுவே ஒரு புதுவழித் திரு அவைக்கு வழிசமைக்கும்.

**07.பணியாளர் திரு அவை:**
பணிவிடை பெறவல்ல பணியாற்றவே எம் பெருமான் இயேசு அவதரித்தார், அரும்பாடுபட்டார். எமது நிறுவனத் திருஅவையின் மாற்றத்தின் ஆரம்பப் பள்ளி என்பது பணியாளர் திரு அவையாதல் ஆகும். ஆளும் வர்க்க நிலையில் இருந்து புதுவழிக்கு வருவது காலத்தின் கட்டாயத்தேவை. எமது ஆயர்கள் தம்மை சுற்றி பணிகளைத் திட்டமிடாது, பொது நிலை மக்களைச் சுற்றி திட்டமிடவே இக்காலமும் கூட்டொருங்கியக்கமும் அழைக்கிறது.

**08.கூட்டொருங்கியக்க மனமாற்றம்**:
பங்கேற்கும் திரு அவையாகத் திகழ ஆரம்பித்து 25 ஆண்டுகளை நிறைவு செய்துவிட்டோம். கொள்கையளவில் இலங்கை திரு அவை ஆசிய திரு அவையின் இலக்காகிய **"பங்கேற்கும் திரு அவை"** எனும் சொல்லாடலை சிந்திக்க, அறிமுகப்படுத்த, செயற்படுத்த ஆரம்பித்து 25 ஆண்டுகள் கடந்தாலும், அதனுடைய பயணம் இன்னும் ஆரம்ப புள்ளியில் இருந்து விலக முயலவில்லை என்றே தோன்றுகிறது. மீள்வசிப்பும், துணிவும், தாழ்ச்சியும் எம் திரு அவையின் ஆளும் வர்க்கத்திடம் இருந்து பிறக்க வேண்டிய அவசியத்தேவையாக உள்ளது.

**முடிவாக.**
கூட்டொருங்கியக்கம், பங்கேற்கும் திரு அவை எனும் பதங்களும், விவாதங்களும் பொது நிலையினர் மத்தியில் திருநிலையினரால் கொணரப்படுதல் அவசியம். இருபக்க மனமாற்றம் ஒன்றே புதிய வழித் திருஅவையை தோற்றுவிக்கும். இளையோரும், பொது நிலை கழகங்களில் எழுச்சிகள் தடைப்படுத்தப்படாமல் ஊக்கப்படுத்தும் பணியாளர் திரு அவை முகங்கள் எமக்கு அவசியம் தேவை. இறையாட்சிப்பணியில் புதிய இறைவாக்கினர்கள் தூய ஆவியின் துணைகொண்டு பயணிக்க வழி உருவாக்கப்படட்டும். பொது நிலையினர் 99.9% கொண்ட திரு அவை தனது முடிவுகளையும் எண்ணங்களையும் மாற்றி அமைக்க முயலட்டும்.

**முற்றும்.**


**அருட்பணி பி. லீயோ ஆம்ஸ்ட்ரோங்**
**யாழ் மறைமாவட்டம்.**




இறந்துபோய் மண்புழுதியில் உறங்குகிற அனைவருள் பலர் விழித்தெழுவர்;

# திருப்பலியில்
# தொடக்கச் சடங்குகள்

### 9.1 தீர்த்தம் தெளித்தல்

இந்த மன்னிப்பு வழிபாட்டின் போது, ஞாயிற்றுக் கிழமைகளில் தீர்த்தம் மந்திரித்துத் தெளிக்கும் சடங்கு நடைபெறலாம். இச்சடங்கு நடைபெறும்போது தண்ணீர் மற்றும் உப்பை மந்திரிக்க அதற்குரிய செபம் சொல்லப்பட வேண்டும். சில பங்குகளில் காலையில் செபம் சொல்லி தீர்த்தம் மந்திரித்துவிட்டு, பிறகு புதிய தீர்த்தத்தை மீண்டும் செபம் சொல்லி மந்திரிக்காமல், மாலைத் திருப்பலியில் பழைய தீர்த்தத்தையே மீண்டும் பயன்படுத்துவது பொருத்தமற்றது. ஏனெனில் செபமும், அதில் சொல்லப்படும் வார்த்தைகளுமே தீர்த்தம் தெளிக்கும் சடங்கின் உட்பொருளை விளக்கும். அது போலவே சில பங்குகளில், கடந்த ஞாயிறன்று மந்திரித்து பயன்படுத்தப்பட்ட பழைய உப்பு, (திருப்பண்ட அறையில் மீதமாகி வைக்கப்பட்டிருந்த கடந்த வாரம் மந்திரிக்கப்பட்ட உப்பு), மீண்டும் அதே தட்டில் அடுத்த வாரம் கொண்டு வரப்பட்டு, மீண்டும் அதன் மீது செபம் சொல்லி மந்திரிக்கப்படுவது பொருளற்றது. அதாவது, மந்திரிக்கப்பட்ட பழைய உப்பை, வாரா வாரம் மீண்டும் மீண்டும் செபம் சொல்லி மந்திரிப்பது பொருத்தமற்றது. எனவே ஒவ்வொரு ஞாயிறும் புதிய உப்பு சிறிதளவே மந்திரிக்கப்பட்டு, அது முற்றிலும் பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் தீர்த்தம் மந்திரிக்கத் தேவையான தண்ணீர், உப்பு மற்றும் தீர்த்தச் செம்பு முதலியவற்றைப் பலி பீடத்தின் மேல் வைக்கக் கூடாது. ஏனெனில் பீடம் பலி ஒப்புக்கொடுப்பதற்காக மட்டுமே உள்ளது அது ஒரு “சுமைதாங்கி” அன்று.

இந்தத் தீர்த்தம் - பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் செங்கடலைக் கடந்து வந்த நிகழ்ச்சியையும், இயேசுவின் திருமுழுக்கையும், நம் ஒவ்வொருவரின் திருமுழுக்கையும் நினைவுகூரும் சடங்காகும். ஆகவே இது பாவம் போக்கும் தண்ணீராகப் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே இதைத் திருப்பலி முடிவில் தெளிக்கக் கூடாது. ஆனால் நவநாள் திருப்பலிகள் முடிவில் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றால், அப்போது தீர்த்தம் தெளிக்கப் படலாம். அதில் தவறு இல்லை. ஏனெனில் அது நலமளிக்கும் இறை ஆசீருக்காகத் தெளிக்கப்படுகிறது. இதே பொருளில்தான் புதிய கட்டடங்கள், வாகனங்கள், பொருள்கள் மீது தீர்த்தம் தெளிக்கப்படுகிறது.



# பொருளுள்ள ஞாயிறு திருப்பலி

**(அருட்பணி. எஸ். ஆரோக்கியராஜ் எழுதிய “திருவழிபாடு ஓர் அறிமுகம்” என்ற நூலிலிருந்து சில பகுதிகள்)**





தொடரும்......

# மரியன்னையின் தூய இல்லத் திருத்தலம் – லொறேடோ
## ( Sanctuary of Holy House of Loreto ) – தொடர் –

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

இத்தாலி மார்கே மாநிலத்திலேயே பெரிய மணி என்கிறபெருமையைக் கொண்டுள்ளதோடு இத்தாலியிலே முதல் 10 பெரிய ஆலய மணிகளுள் ஒன்றாக கருதப்படுகின்றது. ஆலய முகப்பானது (Facade) கண்கவர் ஐரோப்பிய மறுமலர்ச்சி கலையம்சத்தைக் (Renaissance style) கொண்டு கட்டப்பட்டுள்ளது. ஆலய முகப்பின் மூன்று வெண்கலக் கதவுகளும் பழைய ஏற்பாட்டின் மீட்பின் நிகழ்வுகளை சித்தரிக்கின்றன. மரியன்னையின் தூய இல்லத் திருத்தலம் என அழைக்கப்படும் இப் பெசிலிக்காவின் சிறப்பம்சங்களின் மணிமுடியாகத் திகழ்வது மரியன்னையின் தூய இல்லமாகும். மரியன்னை நாசரேத்தில் வாழ்ந்த வீடானது இரண்டு பகுதிகளைக் கொண்டது.






பாறையைக் குடைந்து குகையுடன் கூடிய முதல் பகுதி. அதனோடு பொருத்தப்பட்டுள்ள மூன்று பக்கச் சுவர்களைக் கொண்ட இரண்டாம் பகுதி. மரியன்னை வாழ்ந்த வீட்டின் முதல் பகுதியான கெபியின் மேல் புனித நாட்டில் மங்கள வார்த்தை ஆலயம் கட்டப்பட்டுள்ளது. மரியன்னை வீட்டின் இரண்டாம் பகுதியான மூன்று சுவர்களைக் கொண்ட பகுதியே பெயர்த்தெடுக்கப்பட்டு Loreto பெசிலிக்கா பீடத்தில் வைக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றது.

தூய இல்லமானது 9.5அடி நீளமும், 4.1அடி அகலமும் கொண்ட செவ்வக வடிவிலான பளிங்குச் சுவர்களினால் கட்டப்பட்டுள்ள ஓர் பேழைக்குள் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றது. மரியன்னை, புதிய உடன்படிக்கையின் பேழை (Ark of the New Covenant) என்பதை அடையாளப்படுத்தும் முகமாக இச்செவ்வக பளிங்குச் சுவர்கள் அமைந்துள்ளன. ஆரம்பத்தில் மூன்று சுவர்களை மட்டுமே தூய வீடு கொண்டிருந்தது. நான்காவது சுவரான கிழக்குச் சுவர் இங்கு கொண்டு வரப்பட்ட பின்பு புதிதாக கட்டப்பட்டது. பலிப்பீடமும் குழந்தை இயேசுவைத் தாங்கிய அன்னையின் திருச்சுரூபமும் இச்சுவரையொட்டியே நிறுவப்பட்டுள்ளது. 14ம் நூற்றாண்டில் வைக்கப்பட்ட திருச்சுரூபமானது லெபனானின் கேதுரு மரத்தினால் வடிவமைக்கப்பட்டது. இன்று பார்வையிடக்கூடிய சுரூபமானது 1921ல் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து புதிதாக வைக்கப்பட்டது.

தூய இல்லத்தினுடைய சுவர்களில் 14,15ம் நூற்றாண்டுகளில் வரையப்பட்ட ஓவியங்களின் சிதைவுகளை இன்றும் காணமுடியும்.

இவ் இல்லமானது வானதூதர்களின் உதவியுடனேயே இங்கு கொண்டு வரப்பட்டது என ஒரு கூற்றும் உண்டு. இவ் இல்லமானது மரியன்னை பிறந்து வளர்ந்து, மங்களவார்த்தையும் பெற்ற இடமாகும் என எம் கத்தோலிக்க பாரம்பரியம் கூறுகின்றது. இதனை உறுதிப்படுத்தும் முகமாக பல்வேறு சான்றுகள் இருக்கின்றன. முதலாவதாக நாசரேத்திலுள்ள மரியன்னையின் வீட்டின் முதல் பகுதியான பாறையுடன் கூடிய கெபியின் வாயிலோடு இந்த மூன்று சுவர்களின் அளவுகளும் முழுமையாகப் பொருந்துகின்றன. மேலும் இச்சுவர்களின் கற்களின் தன்மையை ஆராய்ந்தபோது, இயேசுவின் காலத்தில் பாலஸ்தீனத்தில் பயன்படுத்தப்பட்ட கட்டிடப் பொருட்களை சார்ந்துள்ளதாக கூறப்படுகின்றது

மேலும் இவ்வகைக் கற்கள் இத்தாலியில் வீட்டு நிர்மாணப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மொழியியல் (Philology) மற்றும் படிமவியல் (Iconography) ஆய்வுகளும் பல்வேறு சான்றுகளைத் தருகின்றன. இதன் ஒரு அங்கமாக பெசிலிக்காவைச் சார்ந்து காணப்படும் அருங்காட்சியகத்தில் தூய இல்லமானது எவ்வாறு நாசரேத்திலிருந்து தற்போதைய இடத்திற்கு கடல்மார்க்கமாக கொண்டுவரப்பட்டது என்பதை சித்தரிக்கும் ஓவியங்கள் காணப்படுகின்றன.

அறிவியல் கூற்றுக்கள் எவ்வாறாயினும் கத்தோலிக்க விசுவாசிகளுக்கு இது மரியன்னை வாழ்ந்த இடமே என்பது நிதர்சனமான உண்மை. அன்னை மரியாள் ஒரு சிறுமியாக, இளம்பெண்ணாக, மனைவியாக,தாயாக வாழ்ந்த இடம். கபிரியேல் வானதூதரின் மங்களவார்த்தை பெற்ற இடம். பெசிலிக்காவின் பீடத்தில் உள்ள இவ்வீட்டில் நுழைந்து செபிக்கின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு விஷேட செய்தி தரப்படுகின்றது தூய இல்ல பீடத்தில் இலத்தின் மொழியில்,

"HIC VBRBUM CARO FACTUM EST"

**"இங்கே வார்த்தை மனிதனானார்"**, எனப் பொறிக்கப்பட்டுள்ளது. அன்று மரியன்னையின் "ஆம்" மீட்பரை உலகிற்கு கொடுத்தது.

**"நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்"** எனக் கூறிய அன்னை, இறுதிவரை தனது கூற்றிற்கு உண்மையாக இருந்தார். மரியன்னையின் "ஆம்" இறுதிவரை 'இல்லை' என மாறவில்லை. திருமுழுக்கிலே, திருமணம் எனும் திருவருட்சாதனத்திலே, துறவறத்திலே, குருத்துவத்திலே நாமனைவரும் கடவுளுக்கு "ஆம்" என்று கூறியவர்கள் இன்று எம்முடைய "ஆமின்" நிலை என்ன ???

குறிப்பு:- விரும்பியவர்கள் பெசிலிக்காவையும்,
அன்னையின் தூய இல்லத்தையும் மெய்நிகர்
சுற்றுப்பயணம் ( virtual tour ) மூலமும்
பின்வரும் வலைதளத்தைப் பயன்படுத்தியும்
பார்வையிட முடியும்:
https://www.santuarioloreto.va/it/contatti.html
Santuario Pantificio della Santa Cada di Loreto

*முற்றும்.*

**Fr.கிளேரியன்**

அவரிடம் வாழ்வு இருந்தது,அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது.

# மரியாயின் சேனையாரின் கிறிஸ்துவிற்காக அலைச்சல் ஆன்மாக்கள் தேடும் சேனைப்பணி - சிலாபம் மறைமாவட்டத்தில்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பங்குகளில் இயங்கும் மரியாயின் சேனை பிரசீடியங்களின் நிர்வாக ஆட்சியலகாக செயற்படும் பரிகாரமாதா கொமீசியம் (தமிழ்ப்பிரிவு) வருடாந்தம் செய்துவரும் ஆன்மாக்கள் தேடும் பணி என அழைக்கப்படும் கிறிஸ்துவிற்காக அலைச்சல் பணி நிகழ்ச்சித் திட்டத்தை, இவ்வருடம் சிலாபம் மறைமாவட்டத்தின் புனித பேணடின் ஆலய பங்கில் சிறப்பாக நிறைவேற்றியுள்ளது.

20.07.2024 நோன்மதி விடுமுறை தினத்தில் அதிகாலை 4.30 மணிக்குக் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளிலிருந்து ஒன்றிணைந்து புறப்பட்ட சேனைப் பணியாளர்களால் இப்பணி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பங்கின் உதவிப் பங்குப் பரிபாலகர் அருட்பணி வினோதன் அடிகளாரின் அழைப்பின்பேரில், சிலாபம் மறைமாவட்ட மரியாயின் சேனை ஆன்ம இயக்குனர் அருட்பணி சிறிகாந்தா அடிகள் சிலாபம் மறைமாவட்ட மரியாயின் சேனை கொமீசியம் மற்றும் இலங்கை செனாத்துஸ் ஆகியோரின் ஒப்புதலுடனும், கொழும்பு மறைமாவட்ட பரிகார மாதா கொமீசியத்தின் ஆன்ம இயக்குனர் அருட்பணி ஒனாசிஸ் அடிகளாரின் அனுமதியுடனும், பங்கில் இயங்கும் சமுத்திரத்தின் தாரகை வளர்ந்த பெண்கள் பிரசீடியத்தின் உதவியுடனும், நீர்கொழும்பு அன்னம்மாளின் திருமகள் கியூறியா தலைவி சகோதரி அன்ரனற், பரிகார மாதா முன்னாள் தலைவர் சகோதரர் என்டனி மரிய சேவியர் ஆகியோரின் முன்முயற்சியாலும் நிறைவேற்றப்பட்டது.

சேனை சட்டதிட்டங்கள் அடங்கிய சேனைக் கைநூல் (Legion Hand Book) விதந்துரைப்பதன்படி வருடாந்தம் நடைபெறும் இப்பணியானது, ஒவ்வொரு ஆன்மாவுடனும் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் ஆன்ம, உடல் சார்ந்த தேவைகளோடு, இறை இரக்கத்தை பெறும் ஆவலுடன் காத்துக் கிடக்கும் ஆன்மாக்கள் வாழும் இல்லங்களைத் தேடிச் சென்று, அவர்களில் இயேசுவைக் கண்டு பணிவிடை புரிவதாகும். இது சேனை செயற்பாட்டின்படி "கிறிஸ்துவிற்காக மேற்கொள்ளும் அலைச்சல்" (PERE GRINATIO - PRO-CHRISTO) எனக் குறிப்பிடப்டுகின்றது. இத்தகைய சேவைகள், மற்றும் செபங்கள் "தன்னைத் தூய்மையாக்கி பிறரது ஆன்மாவைத் தொடுதல்" என்ற மரியாயின் சேனைப் பொது நோக்கில் தன்னை தூய்மையாக்க உதவுவதாகவும், சமய நிலைகள் சீர்கெடும் மறைமாவட்டங்கள் மற்றும் மிகத் தொலைவு தூரங்களுக்கும் இவ் ஆவல் தொடர வேண்டுமெனவும் திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் அவர்களை மேற்காட்டி அந்நூல் மேலும் குறிப்பிடுகின்றது.

இப்பணியை கொமீசிய கியூறியா சார்ந்த இருபத்தியொரு குழுமங்கள் இணைந்த எழுபத்தெட்டு பணியாளர்கள், ஆரம்ப செபம், செபமாலை மற்றும் பணித்தள பரிபாலகரின் ஆசீர் என்பவற்றுடன் அருள்வழங்கும் கைகளை நீட்டிய சேனையரசி அமல உற்பவி பிரசன்னம் முன்செல்லும் என்ற சேனை நம்பிக்கையோடும், ஆரம்பித்தனர். விசுவாசத்தில் நிலைநிறுத்தும் இறைவார்த்தைகள், செப அட்டைகள், அற்புதப் பதக்கங்கள், படிவங்கள், துண்டுப் பிரசுரங்கள், என்பவற்றைத் தாங்கி பங்குச் சேனை வழிகாட்டிகளுடன் சந்திப்பை மேற்கொண்டு ஆறுதல் வார்த்தையுடன் பங்குசார் தகவல்களையும் பெற்றனர்.

ஆன்ம காரியங்களை நிறைவேற்றல், ஆலயம் சார்ந்த சமூக செயற்பாடுகள், ஆலய சபைகளில் ஈடுபாடு, சேனைவளர்ச்சி, மறைக்கல்வி நிலை, அயலவர் உறவு நிலை, பங்குத்தந்தை பிரதான ஆலயம் பற்றிய கருத்துக்கள். குடும்ப உறவு நிலைகள், திருப்பலியில் ஈடுபாடு பங்குகொள்ள




உள்ள தடைகள், பிறசமயத்தவர்களுடன் உறவு நிலை.

கிறிஸ்தவ சபைகள் ஊடுருவல், அடிப்படைச் செபங்கள் பற்றிய அறிவு, குடும்ப உறவு நிலைகள், குடும்ப செபமாலை செபித்தல், ஆலய சபைகளில் அங்கத்துவம் ஈடுபாடு தடைகள், அருளடையாளங்களின் நிலை. குடும்ப சீராக்கல்கள், கல்வி பொருளாதார நிலைகளில், இறைமக்கள் எதிர்நோக்கும் தடைகள், விருப்பங்கள் மாற்றங்கள், போன்றன தரவுகளாக்கப்பட்டன. இத்தரவுகள் பங்குப் பரிபாலகருடன் கலந்துரையாடப்பட்டு நேர்த்தியான தீர்வுகள் முன்வைக்கப்பட்டு பின் பங்கின் சேனையாரின் கலைநிகழ்வுகளுடன் இறுதிச்செபத்துடனும் மாலை 5.30 மணிக்கு அலைச்சல் பணி நிறைவெய்தியது.

**தகவல் இ. தங்கராஜா தலைவர்**
**பரிகார மாதா கொமீசியம்.**

# கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின் கலைப்பணி







27 ஆண்டுகளுக்கு முன் கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம் ஆரம்பித்த காலத்தில் ஆன்மீக பணிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது போல் காலப்போக்கில் கலை கலாச்சாரம் மிக முக்கியம் என்பதை மன்றம் உணர்ந்தது. இதனால் மன்றமானது பல கலை விழாக்களை ஏற்பாடு செய்யத்தொடங்கியது . 2000ம் ஆண்டு இறை இசை கானங்கள் பாடற் போட்டி கொட்டாஞ்சேனை 2ம் அருளப்பர் சின்னப்பர் மண்டபத்தில் நடைபெற்றது.

2001 – இறை இசை கானங்கள் பாடல் போட்டி கொட்டாஞ்சேனை, 2ம் அருளப்பர் சின்னப்பர் மண்டபத்தில் நடைபெற்றது.

2002 – நடன விழா – மருதானை, புனித சூசையப்பர் கல்லூரி உள்ளகத்திடலில் நடைபெற்றது.

2003 – கலை நிகழ்வு – நீர்கொழும்பு, கிளரேசியன் குருமடத்தில் நடைபெற்றது.

2004 – கலைவிழா – மருதானை, டவர் மண்டபத்தில் நடைபெற்றது.

2005 – கலைவிழா – மருதானை, எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நடைபெற்றது.

2006 – கலைவிழா – மருதானை, டவர் மண்டபத்தில் நடைபெற்றது.

2007 – கலைவிழா – மருதானை, டவர் மண்டபத்தில் நடைபெற்றது.

2009 – கலைவிழா – மருதானை, டவர் மண்டபத்தில் நடைபெற்றது.

2010 – கலைவிழா – மருதானை, எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நடைபெற்றது.

2013 – கலைவிழா – மருதானை, டவர் மண்டபத்தில் நடைபெற்றது.

2014 – விவாத விழா – அன்னை வேளாங்கண்ணி நடுநிலயத்தில் நடைபெற்றது.

2016 – கலைவிழா – மருதானை, டவர் மண்டபத்தில் நடைபெற்றது.

பின் நாட்டின் பாதுகாப்பு மற்றும் தொற்று நோய் காரணமாக கலைவிழாவை நடத்த முடியவில்லை. இறுதியாக 2024ம் ஆண்டு கொட்டாஞ்சேனை, புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி மண்டபத்தில் கலைவிழாவானது நடந்தேறியது.

2000ம் ஆண்டு தொடக்கம் 2024ம் ஆண்டு வரை 25 ஆண்டுகள் நடைபெற்ற இக் கலை விழாக்களில் பல நூறு கலைஞர்களை மேடை ஏற்றி உள்ளமை மன்றத்துக்கும் எம் மக்களுக்கும் மகிழ்ச்சியை கொடுக்கிறது. ஆரம்பகாலத்தில் சிறியவர்களாக மேடை ஏறியவர்கள் தற்போது வளர்ந்திருப்பதை காண்பது மகிழ்ச்சி. அதேபோல் இந் நிகழ்ச்சிகள் மூலம் பலர் மன்றத்தில் இணைந்து பணி செய்வது மேலும் மகிழ்ச்சி அளிக்கிறது. இப்படியான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதன் மூலம் மன்றத்தின் இளம் உறுப்பினர்கள் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யும் நிர்வாகத்திறனை வளர்த்துக்கொள்வது ஒரு பெரிய விடயம் என்றே சொல்லலாம். இக் கலை விழாக்களிலே பல சிறப்பு பணியாளர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். மன்றத்தின் பணிகளில் ஒன்று மன்றத்துக்கு வெளியில் சிறப்புப் பணியாற்றியவர்களை கௌரவித்து மகிழ்வது. கடந்த பல ஆண்டுகளாக இந்த கலை விழாக்களில் பலர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

## மன்றம் வழங்கும் விருதுகள்

❖ **மறை வளர்ப்பு பணி விருது**

கொழும்பு மறை மாவட்டத்தில் தமிழ் பேசும் கத்தோலிக்கர்களுக்காக சிறப்பு பணியாற்றிய அருட் பணியாளர்கள், அருட் சகோதர, சகோதரிகள் அதேபோல் முக்கிய பொது நிலையினரை கௌரவித்து வழங்கப்படுகிறது.

❖ **ஜோசப் வாஸ் விருது**

கொழும்பு மறை மாவட்டத்தில் உள்ள பங்குகளில் நீண்டகால பணிக்காக வழங்கப்படுகிறது.

❖ **அருட் தந்தை. மத்தேயு விருது**

எமது மாணவ, மாணவிகளின் பரீட்சைகளின் போது பெறப்படும் சிறப்பு சித்திகளுக்காக வழங்கப்படுகிறது.

❖ **நற்சேவை விருது**

இவ் விருது கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றத்தில் உறுப்பினராக இணைந்து ஒருவர் 7 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் போது வழங்கப்படுகிறது.

❖ **மறையூட்டும் பணி விருது**

இவ் விருது கொழும்பு உயர் மறை மாவட்டத்தில் அரசாங்க பாடசாலைகளில் கத்தோலிக்க பாடத்தை கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் கற்பித்த ஆசிரியர்களுக்கு மன்றத்தால் வழங்கப்படுகிறது. 2024ம் ஆண்டு 18 ஆசிரியர்கள் இவ் விருதால் கௌரவிக்கப்பட்டனர்.

*(தொடர்ச்சி 18ம் பக்கம்...)*



"என்னைத் தயக்கம் இன்றி ஏற்றுக்கொள்வோர் பேறு பெற்றோர்."

# நற்கருணையில் நம் வாழ்வு அமையட்டும்

சென்ற இதழின் தொடர்ச்சி...



இஸ்ராயேலை மீட்கப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் இருந்ததையும் அது கைகூடாமல் போய்விட்டது என்ற வெறுமை உணர்வையும் இது வெளிப்படுத்துகின்றது. ஆனால் வழிப்போக்கராக இயேசு அவர்களுக்கு இறைவாக்கினர்கள் உரைத்த எல்லா விடயங்களையும் வெளிப்படுத்துகின்றார். நேரமாகவே அவர்களோடு தங்குவதற்குச் சென்ற இயேசு அவர்களோடு பந்தியில் அமர்ந்து அப்பத்தை எடுத்து கடவுளை போற்றி அப்பத்தை பிட்டுக்கொடுக்கின்றார். அப்போது அவர்கள் உயிர்த்த இயேசுவை உடலோடும் ஆன்மாவோடும் கண்டுகொள்கின்றனர். இவ் அனுபவம் புதிய புரிதலுடன் மனமாற்றத்தை ஏற்படுத்துகிறது. இதை ஏனைய சீடருக்கும் எடுத்துரைத்து பறைசாற்றிட மகிழ்சியோடு எருசலேம் திரும்புகிறார்கள். இது ஒரு நற்கருணை அனுபவமாகும்.

இதேபோல புனித பேதுருவும் மீன்பிடிக்க மீண்டும் கடலுக்கு சென்றதை நற்செய்தியாளர் யோவான் குறிப்பிடுகின்றார். உயிர்த்த இயேசு சீடர்களுக்கு தோன்றி வலைகளை வலப்பக்கம் போடும்படி கூறியதும் அதன்படி வலைகளை போட்டு ஏராளமான மீன்கள் பிடிபட்ட போது அவர்கள் கரை திரும்பியதும் கரையில் தீ மூட்டப்பட்டிருப்பதையும் அதன்மீது மீன்கள் வைக்கப்பட்டிருப்பதையும் அப்பங்கள் இருப்பதையும் காட்டுகின்றார்.

இந் நிகழ்வு நற்கருணை அனுபவத்தின் மூலம் சீடர்களின் சாட்சியவாழ்விற்கான நம்பிக்கை வலுவூட்டப்படுவதை எண்பிக்கின்றது.(யோ21:1-10) இயேசுவின் தரிசனத்தாலும் சீடர்களினது நற்செய்தி பறைசாற்றுதலாலும் இறை இயேசுவில் நம்பிக்கை கொண்ட தொடக்ககால கிறிஸ்தவ சமூகம் நற்கருனை வாழ்வை தமதாகக் கொண்டிருப்பதை பார்க்கின்றோம். தொடக்ககால கிறிஸ்தவ சமூகம் தமக்கென தனித்துவமான சிறப்பான வாழ்க்கை முறையை ஏற்படுத்திக்கொண்டனர். கிறிஸ்துவை மையமாக கொண்ட அவர்களது வாழ்வு "ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்" என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்".

**" நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் "**

(யோவான் 13:34)

என்ற கட்டளையில் நிலைகொள்கிறது. அவர்கள் கூடிவரும்போது அன்பின் வடிவமாக இருக்கும் நற்கருணை முதன்மை பெறுகிறது. அவர்களது ஒன்றுகூடல் நம்பிக்கையின் வெளிப்பாடு. இவர்களது வாழ்வு திருத்தூதர்பணியில் அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்.

மக்கள் அனைவரிடமும் அச்சம் நிலவியது... ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடிவந்தார்கள். பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தைப்பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள். (தி. ப:2:42,46) என்று படிக்கின்றோம். இந்த வாழ்வியல் தொடக்ககால கிறிஸ்தவ சமூகத்தின் நற்கருணை வாழ்வை கோடிட்டுக்காட்டுகிறது. தொடக்ககால கிறிஸ்தவ சமூகத்தின் வாழ்வியல் இன்று நம்மில் வாழப்படவேண்டும். ஆனால் இன்றைய நவீன கால போக்குகள் மனிதரின் வாழ்வை திசை மாறச்செய்கின்றது. பலர் அலைபேசிக்குள்ளும், குடிவெறி போதை பாவனைக்குள்ளும் தம் வாழ்வை தொலைத்துவிட்டனர். ஆரோக்கியமற்ற நடத்தையும், சுயநலப்போக்கும் குடும்பங்களை சீரழிக்கின்றது.

குழந்தைகள் ஆதரவற்று, அநாதரவாக, பாதுகாப்பற்று அந்தரிக்க விடப்படுகிறார்கள். வன்கொடுமை, பாலியல் பலாத்காரம், களவு, வாள்வெட்டு, கொலை என வன்முறைகள் நாளாந்தம் அதிகரித்துச்செல்கின்றது. இந்நிலை மாற்றப்பட வேண்டும். அன்பும், பகிர்வும், தியாகமும் நிறைந்த வாழ்வு வளர வேண்டும். வாழப்பட வேண்டும். நம்பிக்கையாளராகிய நாம் ஒவ்வொருவரும் பாஸ்கா மறைபொருளை வெளிப்படுத்தும் நற்கருணையை மையப்படுத்தி நம்வாழ்வை அமைத்துக்கொள்வோம். உயிர்த்த கிறிஸ்துவிற்கு சாட்சியாய் வாழ்வோம்.



**முற்றும்.**

அருட்பணி. A.V.அல்பிரட் O.M.I.

# பொதுக்காலத்தின் கடைசி ஞாயிறு

**24.11.2024**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மெக்சிக்கோ நாட்டில் கத்தோலிக்கத் திருஅவைக்கு எதிராக அடக்குமுறைகள் ஏவிவிடப்பட்டன. அப்போது, “கிறிஸ்து அரசர் என்றென்றும் வாழ்க” என்ற முழக்கத்துடன் “கிறிஸ்டோரஸ்” என்ற குழுவினர் அரசுக்கு எதிராகப் போராடிவந்தனர். இக்குழுவின் ஒரு முக்கிய வழிகாட்டியாகச் செயல்பட்டவர் மிகுவேல் ப்ரோ என்ற இயேசு சபை அருட்பணியாளர். இதற்காக இவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டு, அவரைப் பொதுமக்கள் முன்னிலையில் சுட்டுக்கொல்ல அரசு ஆணை பிறப்பித்தது. மரண பயத்தால் அருட்பணியாளர் மிகுவேல் ப்ரோ அவர்கள், கிறிஸ்துவின்மீது தான் கொண்டிருக்கும் நம்பிக்கையை கைவிட்டு, அவரது செயல்களுக்காக எப்படியும் அரசிடம்

**“கிறிஸ்து அரசர் என்றென்றும் வாழ்க”**

மன்னிப்புக் கேட்பார் என்று அரசு எதிர்பார்த்தது. அதனால், இக்காட்சியை எல்லோருக்கும் காண்பிக்கும் பொருட்டு மெக்சிகோ அரசு அந்நாட்டுப் பத்திரிகையாளர்களை எல்லாம் அழைத்திருந்தது. ஆனால், அருட்பணியாளர் மிகுவேல் ப்ரோ அவர்கள் எவ்வித மரண பயமுமின்றி ஒரு கையில் சிலுவையையும், மறுகையில் செபமாலையையும் ஏந்திக்கொண்டு முழந்தாளிட்டு, தனது இரண்டு கரங்களையும் விரித்தவாறு, “கிறிஸ்து அரசர் என்றென்றும் வாழ்க!” என்று துணிவுடன் கூறினார். அப்போது அவரது உடலை குண்டுகள் துளைக்க, அவர் அப்படியே மண்ணின் மடியில் விழுந்து கிறிஸ்து அரசருக்காக உயிர் துறந்தார். பொதுக்காலத்தை நிறைவு செய்துவிட்டு கிறிஸ்து அரசர் பெருவிழாவை நாம் கொண்டாடுகின்றோம். இப்போது உலகில் எங்கு நோக்கினும் தீவிரவாதமும், பயங்கரவாதமும், போர்களும், பிரிவினைகளும், பிளவுகளும், பிரச்சனைகளும் அமைதியோடு வாழ விரும்பும் ஆயிரமாயிரம் மக்களின் வாழ்வை நிர்மூலமாக்கி வருகின்றன. பதவிக்காகவும், பணத்திற்காகவும், ஆடம்பரமான வாழ்வை ஆக்கிரமித்துக் கொள்வதற்காகவும் இங்கே தினம் தினம் போட்டியும், பொறாமையும், பகையுணர்வும் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றன.

எப்படிப் பதவிக்கு வரலாம், யாரை ஏமாற்றி பதவிக்கு வரலாம், யாரைக்கொன்று பதவிக்கு வரலாம் என்று மனிதர் போடும் தவறான கணக்குகளால் அன்பும், அமைதியும், உண்மையும், நேர்மையும் உலகில் காணாமல் போயுள்ளன. இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையில் இன்று நாம் கிறிஸ்து அரசர் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம்.



உலக வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், பல சாம்ராஜ்யங்கள் சரிந்துபோனதற்கு மண்ணாசையும், பொன்னாசையும், பெண்ணாசையுமே அடிப்படை காரணங்கள் என்பது நமக்குப் புரியும். நான் எனது மக்களின் நலன்களுக்காகத்தான் இப்பதவியில் அமர்ந்திருக்கின்றேன் என்பதையெல்லாம் மறந்துவிட்டு, தனது பெயருக்காகவும், புகழுக்காகவும், பகையை வளர்த்து, போரை உண்டாகி இலட்சக்கணக்கான மக்களை உள்நாட்டிற்குள்ளும் பல்வேறு அந்நிய நாடுகளுக்கும் இடம்பெயரச் செய்து அவர்களை புலம்பெயர்ந்தோராக்கி வருகின்றன இவ்வுலக அரசுகள். தேர்தல் நேர பரப்புரைகளின்போது வாய்க்கூசாமல் வெற்று வாக்குறுதிகளை வீசி எறிந்து, பணத்தைக் காட்டி மக்களை விலைபேசி, ஆட்சிப்பொறுப்புக்கு வந்தவுடன் அம் மக்களுக்கு எதிராக அநியாயச் செயல்களை அரங்கேற்றும் அவலத்தையும் கண்கூடாகக் காண்கின்றோம். இதற்கு நம் இந்திய தேசம் மாபெரும் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது என்பது உண்மை. தனது மக்களையே போர்க்கேடயமாக்கி தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் சுயநலம் கொண்டோர்தான் இன்றைய நமது ஆட்சியாளர்கள்.

ஆனால், நாம் பெருவிழாக் கொண்டாடும் நமது கிறிஸ்து அரசர் இதற்கு முற்றிலும் மாறுபட்டவர் என்பதை அவரது வாழ்வியல் நெறிமுறைகள் நமக்குத் தெரிவிக்கின்றன. நம் கிறிஸ்து அரசரிடம் விளங்கிய மூன்று முக்கியமான பண்புகளை நமது சிந்தனைகளுக்கு எடுத்துக்கொள்வோம்.

தொடர்ச்சி 26ம் பக்கம்...

பொருள் ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர்.


SUGUMAR
RELIGIOUS REPOSITORY
Wholesale & Retail
Dealers in all of Religious Articles
No. 16, Sri Ramanathan Road, Colombo - 13.
Tel : 0112433197


ANGEL TRAVELS & TOURS
ANGEL
Travels & Tours
Renisha Gomez
Proprietor
Airline Ticketing
Visa Services
Tours
077 2259 934
angel.travels2@gmail.com
No.96,A.G.Hinni Appuhamy Mawatha,Colombo-13

# கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்ற கலைவிழா–2024






தூய ஆவியின் கனியோ – அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை



கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்ற கலைவிழாவானது 15.09.2024 அன்று கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி உள்ளரங்கில் நடைபெற்றது.




இவ் வருடம் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புதிய குருக்களாக அருட்பணி. ஷெஹான் கந்தனே ஆராய்ச்சி, அருட்பணி. டிரிஷான் பெர்ணான்டோ, அருட்பணி. ஹசித மேனக, அருட்னி. ஹஷான் அசந்த, அருட்பணி. மினோஜ் காலிங்க. ஆகியோர் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களால் 14.09.2024 அன்று திருநிலைப்படுத்தப்பட்டனர்.



அருட்பணி மனோ குமரன் நாகரத்தினம் அடிகளாருக்கு நன்றி நவில்கின்றோம். கடந்த காலங்களில் கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் தமிழ் அப்போஸ்தலிக்க பணி குரு முதல்வராகவும், ஞான ஒளி பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும், மறைக்கல்வி தமிழ் பிரிவின் பொறுப்புக் குருவாகவும் கடமை ஆற்றிய அருட்தந்தை மனோகுமரன் நாகரத்தினம் அடிகளாருக்கு எமது நன்றிகளை கொழும்பு மறைமாவட்ட மக்கள் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம்.



கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் ஞான ஒளி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக பொறுப்பேற்றுள்ள அருட்பணி. ஒனாஸியஸ் பெர்ணான்டோ அடிகளாரை வாழ்த்துகின்றோம்.



கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் இறையியல் கற்கை பீடம் – தமிழ் பிரிவின் இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ள அருட்பணி பிரகாஷ் பெர்ணான்டோ அடிகளாரை வாழ்த்துகின்றோம்.



கொழும்பு மறைமாவட்ட தமிழ் அப்போஸ்தலிக்க பணி குரு முதல்வராக புதிதாக நியமனம் பெற்ற பேரருட்திரு ஜுட் ராஜ் அடிகளாரை அன்புடன் வாழ்த்தி வரவேற்கின்றோம்.



கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் மறைக்கல்வி தமிழ் பிரிவின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள அருட்பணி பீட்டர் சுபராஜ் அடிகளாரை வாழ்த்துகின்றோம்.



பிறரிடம் இரக்கமும், சகோதரர் அன்பும், பரிவுள்ளமும், மனத்தாழ்மையும் கொண்டிருங்கள்.

# அனைவரது அன்பையும் வென்ற இறை ஊழியன் சகோதரர் ஜோர்ஜ் தரகன்

இந்திய கர்னாடகா மாநிலத்தின் மைந்தனான சகோதரர். ஜோர்ஜ் தரகன் ஒரு கன்னட திரையுலகின் முன்னாள் நடிகனும் சினிமாவில் பல்துறையிலும் முன்னோடியாக அனைவராலும் புகழ பெற்றவர். தன் வாழ்வே திரையுலகு என்று வாழ்ந்தவர். ஆயினும் இறைவன் அவரை தன் பணிக்காக தேர்ந்துகொண்டார். தனது வாழ்வில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களினூடாக இவர் மனநிம்மதியை தேடி அலைந்து களைத்தும் போனார். இறுதியில் 1989ம் ஆண்டில் டிவைன் தியான இல்லத்தை வந்தடைந்த சகோதரர் எப்படியோ தியானத்தில் பங்குகொண்டு தியானத்தின் இறுதி நாளன்று இறைவனின் அழைப்பைப் பெற்றுக்கொண்டார். அன்றுமுதல், தான் இனி தனக்காக அல்லாமல் கிறிஸ்துவுக்காகவும் அவரது பணிக்காகவும் வாழ தீர்மானம் கொண்டார்.

தன்னை விட்டு விலகிச்சென்ற தன் மனைவியிடம் சென்று மன்னிப்பு கேட்டு தன்னோடு வாழ வருமாறு அழைக்கும் அளவுக்கு அவர் தாழ்ச்சி கொண்டவராக மாறியிருந்தார். ஆனாலும் அவரது மனைவி ஏற்கனவே மறுமணம் முடித்திருந்ததால் அதற்கு இசையவில்லை. எனவே சகோதரர் டிவைன் தியான மையத்தில் தனது பணிவாழ்வைத் தொடங்கினார். தனது ஆற்றல்கள் திறமைகள் அனைத்தையும் கிறிஸ்துவுக்காக பயன்படுத்த முடிவுகொண்டார். தன்னைத் தேடி வந்த அனைத்து சினிமா வாய்ப்புக்களையும் கூட அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அனைத்தையும் முற்றாக துறந்து வேதாகமத்தை தன் கையில் ஏந்தினார். அன்று தனது கையில் எடுத்த வேதாகமத்தை தன் மனதில் பதித்து தனது மரணத்தருவாயில் வரை உலகெங்கும் கொண்டு செல்ல தவறவில்லை. டிவைன் தியான மையத்தில் மாத்திரமல்லாமல் இந்தியாவின் பல பகுதிகளிலும் சென்று  நற்செய்தியை அறிவித்ததோடு உலகின் பல நாடுகளுக்கும் ஏன் இலங்கைக்கும் கூட 30 தடவைகளுக்கு மேல் வருகை தந்து தனது நற்செய்தி பணியை ஆற்றி வந்தவர் என்பது உண்மை. அல்லேலூயா என்ற அவரது கம்பீரக் குரலுக்கு வேறு எவரும் ஈடுகொடுக்க முடியாது. கிறிஸ்துவில் முழு நம்பிக்கை கொண்டவராய் நற்செய்தியை அனைவருக்கும் தனது வார்த்தையால் மட்டுமல்லாமல் தனது வாழ்வாலும் எடுத்துச் சென்றவர்.

இலங்கையில் 2000ம் ஆண்டளவில் கொழும்பு புனித வியாகுல மாதா ஆலயத்தில் அருட்பணி. ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே அடிகளாரால் ஏற்பாடு செய்யப்பட்ட டிவைன் தியான ஞானவொடுக்கத்தில் இலங்கையில் இவரது பணி ஆரம்பமானது. இதனை கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.



கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம் வருடா வருடம் ஏற்பாடு செய்த தியானங்கள் கொழும்பு மற்றும் வெளி மறைமாவட்டங்களில் நடைபெற்றபோது சகோதரர். தரகனே முன்னின்று வழிநடத்தி வந்திருக்கிறார். தேவத்தை பெசிலிக்கா ஜீபிலி மண்டபத்தில் நடாத்தப்பட்ட இரண்டு மூன்று நாள் தொடர் ஞானவொடுக்கங்களை சோர்வின்றி நடாத்தி முடித்தார்.தனது கம்பீரமான இனிய குரலால் அனைவரது மனதையும் தன் பால் ஈர்த்தவர். அது மட்டுமல்லாமல் பல நல்லுள்ளங்களின் அன்பையும் பெற்றவர். பலர் தனிப்பட்ட ரீதியில் சகோதரனின் ஜெபத்தினையும், ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் பெற்று வந்திருக்கிறார்கள். சகோதரர் ஜோர்ஜ் தரகன் கடும் சுகவீனமுற்று கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்களாக மருத்துவமனையில் கடும் சிகிச்சைப்பிரிவில் இருந்து 14.10.2024 அன்று இறையடி எய்தினார். இவரது இழப்பானது பலருக்கு துயரத்தை ஏற்படுத்தியது. அவரது அன்பைப் பெற்றவர்களில் அவர் என்றும் வாழ்கிறார். அவரது பணி பலர் மூலமாக இன்னும் தொடர்கிறது. இவரது இழப்பானது கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்துக்கும் பெரும் கவலையை கொடுத்துள்ளது. இவரது இடத்தை வேறு எவராலும் ஈடுசெய்ய முடியாது என்றே சொல்ல வேண்டும். இவ்வுலகிலிருந்து அவர் சென்றிருந்தாலும் விண்ணக வான் வீட்டில் அவர் தனது பணியை தொடர்வார் என்பது எமது நம்பிக்கை. இறைவன் இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளவேண்டுவோம். அவரும் எமக்காக இறைவனை என்றும் மன்றாடுவார்.

*-எனஸ்டன் பெர்னாண்டோ-*

# வயோதியர் மற்றும் சிறுவர் காப்பக சந்திப்பு



கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின் பெண்கள் குழுவினர் 02.11.2024 அன்று கேகாலையில் அமைந்துள்ள விக்ரமசிங்க முதியோர் இல்லம், சிறுவர்கள் காப்பகம் மற்றும் மனவளர்ச்சி குன்றியவர்களின் காப்பகம் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து அவர்களுக்கு தேவையான உலர் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்கள்.

# இறந்த ஆன்மாக்களுக்கான திருப்பலி



கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றத்தின் இறைபதம் அடைந்த ஆன்மீக தந்தையர்கள், உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களின் குடும்பங்களில் இறந்த ஆன்மாக்களுக்காகவும் இரங்கற் திருப்பலியானது 9.11.2024 அன்று, கொழும்பு 13, செக்கடித்தெரு அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் ஆன்மீக இயக்குனர் அருட்பணி. ஆனந்தன் பெர்ணான்டோபுள்ளே அடிகளாரால் நிறைவேற்றப்பட்டது.

# கிரிக்கெட் சுற்று போட்டிகள்



கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின் விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் வளர்ந்தோரேக்கான கிறிக்கற் சுற்றுப் போட்டிகள் 23.11.2024 அன்று நாராஹென்பிட, ஷாலிங்கா விளையாட்டு மைதானத்தில், 17 அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளுக்கான இறுதி ஆயத்தக்கூட்டம் 10.11.2024 அன்று இயக்குனர் தந்தை அருட்பணி ஆனந்தன் பெர்ணான்டோபுள்ளே அடிகளார் தலைமையில் கொட்டாஞ்சேனை, அருட் பணி இக்னேஷியஸ் நடுநிலையத்தில் நடைபெற்றது.



அவருடைய செயல்களை மக்களினத்தாரிடையே அறிவியுங்கள்.

# இயந்திர உலகில் தொலைந்து போன அழகான உறவு வாழ்வு உயிர்பெற....

இயந்திர உலகத்தில்
இயந்திர கதியில்
இயந்திர மயமாய்
இயந்திரங்களோடு இயந்திரமாய்
மனிதமும் அதன் மாண்பும்
காலத்தோடு காணாமல் போய் நெடுங்காலம்

அழகான உறவுகளில் ஒட்டிக்கிடந்த
பந்தமும் பாசமும் நெருக்கமும்
மாயமாய் மறைந்தே தான் போய் பலகாலம்
விழிப்புணர்வு பெறவேண்டிய
காலமும் நேரமும் நம் கண்முன்னே

அமைதியான இனிமையிலே
படைப்புகள் புடைசூழ
இறையவனின் உருவும் சாயலும் கற்றுத்தந்த
இறை அன்பும் பிறரன்பும் வாழ்வோடு
இணைக்கப்படாமல் வைத்தோம் தொலைதூரம்

நிலத்தில் இருந்து எழுந்த மூடுபனி நனைத்த
மண்ணால் மனிதனை படைத்து
ஊதிய உயிர்மூச்சின்
மென்மையும் மேன்மையும்
நெருங்கிய உறவும் உயிரும் பரிவும்
இனிய பாசமும்
நெஞ்சை விட்டு நீங்கி வெகு தொலைவில்
அவை மீண்டும் பிரியாத நிழலாகி
நம் வாழ்வோடு இணைத்து வாழ
தருணம் தேடுவோம்.

அன்று அந்திமாலை செபவேளை
கட்டாயம் நம் வீட்டில் செபமாலை
ஓதினோம் இரையுறவில் சங்கமித்தோம்
முற்றங்களும் சுற்றங்களும் கலகலப்பில்
மூழ்கி இனித்திருந்தோம் உறவின் மகிழ்வில்
இன்று வெறிச்சோடி போன முற்றங்கள்
தொலைக்காட்சி பெட்டி முன்
ஊமையாகிப்போன சுற்றங்கள்,
இறையுறவும் மனித உறவும் மௌனமாகி
மாயமாகிப் போன அவலங்கள்.

சிரிப்பலைகளால் பளபளத்து
வாழ்த்துக் கூறிய அகங்கள் அன்று முன்னால்
வருபவரையே தெரியாமல் தொலைபேசியில்
தம்மை தொலைத்துக் கொண்டு நகரும்
முகங்கள் இன்று
பாவித்துவிட்டு தூக்கியெறியும்
இயந்திரங்களாகிப் போன
மனிதத்தின் பரிதாபம்
உள்ளமும் உணர்வுமற்ற இயந்திரம் என
கண்மூடித்தனமாய் காயப்படுத்தி
நடைப்பிணமாக்கும் விபரீதம்

நிரம்பி வழிந்த வேலை செய்ய
இலகு இயந்திரம் இல்லை அன்று
ஆனால் உறவாட நேரம் இருந்தது
தொட்டவுடன் வேலை முடிக்கும் ஆயிரம்
இயந்திரம் இருந்தும்
சிரித்து கதை பேச நேரம் இல்லை
சிந்திக்க வேண்டிய நொடிகளுக்குள் நாம்

இறைசாயல் பெற்ற நாம்
நம் மாண்பைப் போற்றி
பிறர் மாண்பை மதிப்போம்.
இறைவனின் உயிர்மூச்சின் நிறைவுகள் தாங்கி
மனிதத்தின் குறைகள் போக்கி
மனிதநேயம் காப்போம்.
தூக்கியெறியும் இயந்திரமும்
பழுதுபார்க்கப்படும்
சிறப்பாய் போற்ற வேண்டிய உறவுகளை
சீர் செய்து வாழ்வளிப்போம்.

தந்தை மகன் தூய ஆவியின்
நெருங்கிய உறவில் நாமும்
மகிழ்ந்து வாழ அழைப்பு பெற்றோம்.
உறவின் ஊற்றான தந்தையின் கரம் பற்றி
வாழ்வின் உறவானவர் இயேசுவை
இதயம் தாங்கி
உறவின் உயிரான ஆவியால் திடம் பெற்று
பாசம் பரிவு நேசம் அரவணைப்பு எனும்
மென்மையான உணர்வுகள் அகம் சூழ
மேன்மையான வாழ்வின் அலங்கரிப்பில்
இகம் மகிழ
நலம் வாழ்ந்து, பிறர் நலம் காத்து
மனித மாண்பு மனிதநேயம் போற்றி
இறையுறவில் நாம் மகிழ்வோம்.
பிறர் உறவில் இணைந்து மகிழ
புது உலகம் படைக்க கரம் கோர்ப்போம்.

- செல்வி த. மேரி பற்றீசியா -

அவரது பெயரின் மாட்சியைப் புகழ்ந்து பாடுங்கள்.

# மனித மாண்பு தரும் வாழ்வின் பாடங்கள்

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

**மனிதனும் மனித மாண்பும்**

மனிதன் பணம் செலுத்தி பிறப்பதில்லை. பிறப்பு இயற்கையானது. அதுபோலவே அவனது மாண்பும் இயற்கையாக அவனுக்கு கொடுக்கப்படுகின்றது. மனித மாண்பு ஒரு கேள்வியாக அமைகின்றபோது அது மனிதன் என்பவன் யார் என்கின்ற கேள்விக்கு பதிலளிக்கின்றது. மனிதனிடம் காணப்படும் தகுதி அவனது வாழ்வின் நிலையையும், யதார்த்தத்தையும் காட்டுகின்றது. அவன் மிக முக்கியமானவன் என்பதை கோடிட்டு காட்டுகின்றது. மனிதன் தனித்துவமானவன், தனது அறிவால் சிந்திக்கக் கூடியவன், உணரக்கூடியவன், தனித்து செயல்படக்கூடியவன். எனவே, அவனது வாழ்வின் கூறுகளை பிரித்துப் பார்க்கமுடியாது.

அவனிடம் வாழ்வு இருக்கின்றது. வாழ்வை கொடுக்கமுடியும். அதுமட்டுமல்ல புதிய வாழ்வை உருவாக்கவும் முடியும். இதுவே அவனிடம் காணப்படும் சிறப்பான பெறுமதியான இயல்பாக இருக்கின்றது. மனிதன் தனது மாண்பை மூன்று வகை உறவிலே ஆழ அறிந்துகொள்கின்றான்.

முதலாவதாக, **மனிதன் மனிதனோடு கொண்டுள்ள உறவு:** இந்த உறவு மிக முக்கியமானது. இவ்வுறவுதான் அவனை சமூகம் என்கின்ற உறவில் வாழ அழைக்கும். சமூகம் கொடுக்கின்ற மாண்பு.

இரண்டாவதாக, **மனிதன் இயற்கையோடு கொண்டுள்ள உறவு:** மனிதன் இயற்கையோடு உறவுகொள்ளும்போதே அவன் படைத்த படைப்புக்களிலே தான் உயர்ந்தவன் என்கின்ற மாண்போடு வாழ்வான். இயற்கை அவனுக்கு கொடுக்கின்ற மாண்பு.

மூன்றாவதாக, **மனிதன் இறைவனோடு கொண்டுள்ள உறவு:** இவ்வுறவு அவனை ஆன்மீக பாதையில் வழி நடத்தும். இறைவனை அறிந்து நேசிக்கின்றபோது அவனது முழு ஆளுமையையும் அவனை இயக்குகின்ற தெய்வீக சக்தியில் கண்டுகொள்கின்றான். ஆன்மீகம் கொடுக்கின்ற மாண்பு. மனித மாண்பு சந்திக்கும் சவால்கள் மனிதன் ஒளியை ஏற்றினாலும் இருளில் வாழ்வதை அதிகம் விரும்புகின்றான். இதன் அர்த்தம் என்ன? இந்த உலகிலே தீமைகள் அதிகரித்தும், அதன் விளைவுகள் மனித சிந்தனையிலும், எண்ணங்களிலும் அவனது செயல்களிலும் அதிக தாக்கத்தை செலுத்துகின்றது. பிழைகள் நியாயப்படுத்தப்பட்டு, செய்வது தவறு என்று அறியாமல் போகின்ற நவீன யுகமாகவே மாறிவிட்டது. இதற்கு பல்லாயிரக்கணக்கான காரணங்கள் இருக்கின்றன. இருப்பினும் அவன் மிகக் குறுகிய மன நிலை கொண்டே காணப்படுவது அவனது சுய நலனை தெளிவாகக் காட்டுகின்றது. பல நாடுகளிலே இடம்பெற்ற யுத்தங்களும், அதனால் அநியாயமாக கொல்லப்பட்ட மனித உயிர்களும் மனித மாண்பை மறைக்கின்ற, மறுக்கின்ற வரலாற்று நிகழ்வுகளாகிவிட்டன.

எமது கலாசாரத்திற்கு புறம்பான விடயங்கள் பல மனித மாண்பிற்கு சவாலாக அமைந்துவிடுகின்றது. குறிப்பாக மூன்று விடயங்களை அல்லது மனித மாண்புக்கு எதிரான சவால்கள் மூன்றை பற்றி எனது சிந்தனையை திருப்புகின்றேன். முதலாவதாக, திருமணத்திற்கு முன் கூடிவாழ்வது ஏற்றுக்கொள்ள முடியாது. இது எந்த சந்தர்ப்பத்திலும் நியாயப்படுத்த முடியாது.

அண்மைக்காலமாக எமது தமிழ் சினிமாக்களில் திருமணத்திற்கு முன் கூடிவாழும் முறையை மறைமுகமாக ஊக்கப்படுத்தி வருகின்றார்கள். மனித சிந்தனையை மிக ஆழ ஊடுருவுகின்ற இந்த சினிமா திரைப்படங்கள் எமது கலாச்சாரத்தை அல்லது கலாச்சார விழுமியக் கொள்கைகளை மழுங்கடிக்கச் செய்வதும், வாழ்வுக்கு முரணான கொள்கைகளை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதும் எமது சமூகத்திற்கான சவாலாக அமைகின்றது.

**தொடரும்...**

S. ஜேம்ஸ் சுரேந்திரராஜா. *OMI*

**பிரான்ஸ்**



ஆண்டவரைப் புகழுங்கள்! ஏனெனில், அவர் நல்லவர்.

# ஆதித்திருச்சபையில் கற்றுக்கொள்ளும் கிறிஸ்தவம் – தொடர் கட்டுரை –

## உரோமையர் 8ஆம் அதிகாரம்

ஊனியல்பு என்பது வெறும் இச்சையே. இது இறைவனிடமிருந்து நம்மை முற்றாக பிரித்து விடுகிறது. பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்களின் பாவவாழ்வு இறைவனுக்கு முன் அருவருப்பாய் தெரிவதை உணர்ந்த மோயீசன், இறைவன் அளித்த கட்டளையை விபரித்து எழுதி அவர்களை பயப்படுத்தினார். தங்கள் பாவ வாழ்வினால் இறைவன் நம்மைத்தண்டிப்பார், தமக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களைப் பறித்து தம்மை மீண்டும் அடிமை வாழ்விற்கு கையளிப்பார் என்று அஞ்சினர். இறைமகன் இயேசுக்கிறிஸ்து நமக்குக் கற்றுத்தந்தவை எல்லாம் அன்பு ஒன்றே. இந்த இறையன்பை நமக்கு கற்றுத்தருபவரே தூயஆவியானவர். அன்பு நம்மிடையே வரும்போது பாவம் நம்மிலே குடிகொள்ளாது. ஏனெனில் நாம் தூய ஆவியை கொண்டிருப்பதால் நாம் கடவுளுக்கு உரியவர்களாகிறோம். இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்த ஆவியானவர் எம்மோடு குடிகொண்டு இருப்பதால் சாவிற்குரிய பாவத்தினின்று நாமும் கிறிஸ்துவோடு கூட உயிர்த்தெழுகின்றோம். எனவே, நாம் இந்த உலகில் உயிர் வாழும்வரை தூய ஆவியை துக்கப்படுத்தி நம்மைவிட்டு விலகி விடாது காத்துக்கொள்ள வேண்டும். நாம் ஊனியல்பின் அடிப்படையில் வாழ முனைந்தால் நமக்கு கிடைக்கும் தண்டனை வாழ்விற்குரிய சாவு. மாறாக ஆவிக்குரிய மன வலிமையுடன் நாம் வாழ்ந்தோமாயின் நமக்குக் கிடைப்பது நிலைவாழ்வும் அமைதியுமாகும். இவ்வுலகில் நாம் இறைவனுக்குரியவராக வாழ்வது இலகுவானதல்ல. பல இன்னல்களுக்கு மத்தியிலும் நாம் தூய ஆவியின் ஆளுகையில் வாழும்போது இயேசுவின் மறு வருகையின் போது அவரோடு கூட அவரது மாட்சிமைக்குள் நுழைவோம். ஏனெனில் இறைவன் தாம் முன் குறித்தோரை அழைத்திருக்கிறார். தாம் அழைத்தோரை தமக்கு ஏற்புடையவராக்குகிறார். தமக்கு ஏற்புடையோரை தம் மாட்சிமையில் பங்குகொள்ளச் செய்கிறார்.



தம் சொந்த மகனையே நமக்கென்று இவ்வுலகிற்கு கையளித்த இறைவன் நம் சார்பில் இருக்கும் போது நமக்கெதிராய் நிற்பவர் யார்? இந்த உலகையும் உலகின் அனைத்து படைப்புக்களையும் அவர் நமக்காகவே நமக்கென்று அளித்திருக்கின்றார். இவைஅனைத்திலுமே இறைவன் நம்மீது கொண்ட அன்பின் வெளிப்பாடு. ஆயினும் நாம் இறைவனுக்கு மாத்திரமே உரியவர்கள். எந்த படைப்புகளும் இறைவனின் அன்பிலிருந்து நம்மை பிரிக்க முடியாது. அதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்கவும் கூடாது. காரணம் எம்மிலே கோயில் கொண்டிருப்பவர். தேவ ஆவியானவர். நாம் அவர் வாழும் ஆலயம். இந்த மனநிலையோடு அன்பின் ஆவியானவர் நடாத்தும் பாதையில் வாழ்வோம்.

**தொடரும்.**

– திருமதி. கோமஸ் –

# கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின்...





*(10ம் பக்க தொடர்ச்சி...)*

❖ **சேவைச்சுடர் விருது**

மன்றத்தில் சிறப்பு பணிக்காக, அங்கத்தவர் ஒருவரின் நீண்டகால பணி, தலைமைத்துவ அர்ப்பணம், என்பவற்றை கருத்தில் கொண்டு வழங்கப்படுகிறது.
இவ் விருதைப்பெற்றவர் பெயருக்கு முன் சேவைச்சுடர் எனும் பட்டம் பாவிக்கப்படும். இவ் விருது வாழ்க்கையில் ஒருமுறை மட்டுமே ஒருவருக்கு வழங்கப்படும்.

2024ம் ஆண்டு வரை 6 அங்கத்தவர்களுக்கு மட்டும் இவ் விருது வழங்கப்பட்டுள்ளது.
இதுவரை மன்றத்தில் சேவைச்சுடர் விருது பெற்றவர்கள்.

**12.08.2007 சேவைச்சுடர் திரு. றொபட் பெர்னாண்டோ**
**04.09.2010 சேவைச்சுடர் திரு. புஸ்பா கோமஸ்**
**13.10.2013 சேவைச்சுடர் திரு. அம்புறோஸ் பீட்டர்**
**17.12.2017 சேவைச்சுடர் திரு. எமிலியான்ஸ் பெர்னாண்டோ**
**10.12.2022 சேவைச்சுடர் திரு. சவரிமுத்து ஞானப்பிரகாசம்**
**10.12.2022 சேவைச்சுடர் திரு. எனஸ்டன் பெர்னாண்டோ**

மன்றத்தின் இளைஞர் பணியாகவும் இந்த கலைவிழாக்களை கொள்ளலாம்.பல விதமான போட்டிகள் ஆடல் பாடல், தனி, குழு என பல சுற்றுகள் வைக்கப்பட்டு இறுதிச்சுற்று கலை விழாவாக நடைபெறும்.
போட்டிகள் வைப்பது இளைஞர்கள் தங்களுடைய முழுத் திறமையையும் வெளிக்கொணரவே. உண்மையாகவே தங்களை வளர்த்து கொள்ளும் கலைஞர்களுக்கு மேடை அமைக்கவே. இப் போட்டிகளில் வெற்றி தோல்வி என்பதைத் தாண்டி இளைஞர் யுவதிகள் ஒன்று கூடுதல், வெற்றியை அடைய முன் செல்ல தோல்வி வந்தாலும் அது வெற்றியின் ஒரு படி என தளராது முன் செல்ல, எல்லாவற்றையும் விட அதற்குள் ஆன்மீகத்தை கட்டி எழுப்பிக் கொள்ள, இக் கலை விழாக்கள் வழி சமைத்தன.

அடுத்த இதழில் மன்றத்தின் மற்றுமொரு பணியைப் பற்றி பார்ப்போம்.

- எனஸ்டன் -

# தூய யூப்ரேசியாவின் வாழ்க்கையும் போதனைகளும்



கடவுளுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்து சுய ஆசைகளை கட்டுப்படுத்தி கடவுளின் பணிக்காக தம்மை மறந்து கடவுளின் அன்பில் நிலைத்திருந்து கடவுளுக்காக பல துன்ப துயரங்களை தாங்கி மனிதர்களிலே வித்தியாசமாக வாழ்ந்தவர்கள்தான் புனிதர்கள்.
அதிலும் ஒரு பெண்ணாக சமூகத்தில் பல சவால்களை தாண்டி கடவுளுக்கு தன்னை அர்ப்பணித்தவர் தான் ரோஸ் வேர்ஜினி என்ற இயற்பெயரை கொண்ட தூய மேரி யூப்ரேஷியா. தூய மேரி யூப்ரேஷியா பெலட்டியர் 1796ம் ஆண்டு ஆடி மாதம் 31ம் திகதி பிரான்ஸ் நாட்டில் பிறந்தார். இறைவிசுவாசத்திலும் பக்தியிலும் வளர்ந்த இவர், இளம் வயதிலேயே இறையழைப்பை உணர்ந்தார். 17 வயதிலே ரோஸ் வேர்ஜினி அருட்சகோதரி எமிலி கமலின் உருவாக்கிய சபையில் அருட்சகோதரி மேரி யூப்ரேஷியா எனும் பெயர் கொண்டு இணைந்தார். இவர் கல்விக்காகவும், சிறுவர்களை பராமரிக்கவும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். இவரின் அயராத உழைப்பின் மூலம் இவரது அர்ப்பணிப்பு வெளிப்பட்டது. 1826ம் ஆண்டில் யூப்ரேஷியா தனது சபையில் மேலாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் அதன் விரிவாக்கத்தில் முக்கிய பங்காற்றினார். மேலும் கட்டமைக்கப்பட்ட மற்றும் பணிசார்ந்த அமைப்பாக அதன் சீர்த்திருத்தத்தில் செல்வாக்கு செலுத்தினார். அவரின் தலைமையின் கீழ், இந்த உத்தரவு இளம் பெண்களின் கல்வி மற்றும் ஏழைகளின் கவனிப்பில் அதிக கவனம் செலுத்தியது. இது அதன் பணியின் மையமாக மாறியது. அவர் வாழ்க்கையில் செய்த மிக முக்கியமான சாதனை தான் 1835ம் ஆண்டு நல்லாயன் சபையினை நிறுவியது. இந்தச் சபை பெண்கள் மற்றும் சிறுமிகளின் கல்விக்காகவும், வாழ்க்கை தரத்தை விருத்தி செய்யவும் இயங்கி வந்தது. தூய மேரி யூப்ரேஷியா பெலட்டியரின் அணுகுமுறையும் ஆழ்ந்த இரக்கமும் சமூக பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தூர நோக்காக அமைந்தது. கல்வி, சமூக மாற்றத்திற்கான ஒரு சக்தி வாய்ந்த கருவி என்று அவர் நம்பினார். மேலும் இந்த நம்பிக்கையை பல்வேறு முயற்சிகளில் செயல்படுத்த அயராது உழைத்தார். இவரது பணி சமூக நீதி மற்றும் கல்விக்கான கத்தோலிக்க திருச்சபையின் அணுகுமுறைக்கும் மாற்றமாக அமைந்தது. தனது அயரா முயற்சியினை கடவுளுக்காகவும் கல்விக்காகவும் கொடுத்த இவர் சித்திரை மாதம் 24ம் திகதி 1868ம் ஆண்டில் இறைபதம் அடைந்தார்.

ஆக்கம்: செல்வி. அட்ரினா யனிஷ்யா பெர்னான்டோ
தரம்: 08 புனித. பிரிஜட் கன்னியர் மடம்



என் ஆற்றலாகிய ஆண்டவரே! உம்மிடம் நான் அன்புகூர்கின்றேன்.

# நல்லாயன் இயேசுக் கிறிஸ்து

மனிதரின் பாவம் போக்க மண்ணுலகில் உதித்த தேவகுமாரனாம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து பல பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டாலும், நல்லாயன் எனும் பெயர் விசேடமானதாகும். இயேசுவை நல்லாயனாக சித்தரிக்கும் ஓவியம் பலதரப்பட்ட மக்களையும் வேறுபாடுகளையும் கடந்த ஓவியமாகும்.

வேதாகம புத்தகத்தில் சில இடங்களில் இயேசு தன்னை நல்லாயன் என்று குறிப்பிட்டுள்ளார். யோவான் 10 ஆம் அதிகாரத்தில் 11 ஆம் வசனத்தில் “நானே நல்லாயன்” என்று குறிப்பிடுகின்றார். இயேசு தன்னை நல்லாயனாக குறிப்பிடும்போது அவரின் மந்தைகளாக நாம் அமைகின்றோம்.

மந்தை ஆடுகளின் குணநலன்களைப் பற்றி அறிவதன் மூலம் இயேசு ஏன் தன்னை நல்லாயனாக உருவகிக்கின்றார் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

ஆடுகள் ஒன்றை ஒன்று சேர்ந்து கூட்டமாக வாழுகின்ற இயல்பைக் கொண்டவையாகும். அவை சுயமாக செயற்பட முடியாதவை. இலகுவில் வழிதவறி செல்லக்கூடிய தன்மை கொண்டவையாகும். ஒன்றை ஒன்று பின்தொடர்பவையாகும். மிகவும் பலவீனமான ஆடுகள் காட்டு மிருகங்களுக்கு இரையாவன. இதன்மூலம் உடலளவிலும், மனதளவிலும் பலவீனமான மனிதகுலத்தை சீர்படுத்த வந்த நல்ல ஆயனாக இயேசு தன்னை உருவகப்படுத்துகின்றார்.

நல்ல ஆயனின் பண்புகளும் வேதகாமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நல்ல ஆயன் தன் மந்தையை பெயர் சொல்லி அழைக்கின்றார். நல்ல ஆயனின் குரலை மந்தைகளும் நன்கறியும். அவர் ஆடுகளை நீர்ப்பாய்ச்சலான மேய்ச்சல் தரைக்கு அழைத்துச் செல்வார். திருடனைப் போல் புறத்தில் வராமல் அவர் வாயிலின் ஊடாக ஆட்டுப் பட்டிக்குள் பிரவேசிப்பார்.



அவர் மந்தைகளின் முன்னே நடந்து மந்தையை வழிநடத்துவதன் மூலம் காட்டு விலங்குகள் வருகையை முன்கூட்டியே அறிந்து தன் மந்தையைக் காப்பதுடன், தேவையான தருணத்தில் தன் மந்தைக்காகவும் தன் உயிரையும் கொடுப்பார்.

தன் மந்தையில் ஆடு ஒன்று வழிதவறி செல்லும் போது அந்த ஆட்டிற்காக பிரயத்தனப்படுகின்ற நல்லாயன் அவர்.

தன் சாயலில் படைத்த மனிதகுலத்தின் மேல் கொண்ட பரிவால் மனித குலத்திற்காக தன்னைத் தியாகம் செய்வதற்காக தன்னை தாழ்த்தி சிலுவை மரணபரியந்தம் நடந்தார்.

இவ்வாறு எமக்காக பாடுகளை சுமந்து எம்மை மீட்பதற்காக சிலுவையில் பலியாகினார். மந்தைகளாகிய நாமும் அவரது குரலுக்கு செவிசாய்த்து அவரின் வழிநடத்தலைப் பின்பற்றுவோமாக.

- ஜூடின் சிந்துஜன், (லண்டன்) -

# பைபிள் ஹீரோக்கள்

தொடர்ச்சி..... 18

## சிறுவர்களே! உங்களுக்காக

ஆக்கம் : இவஞ்ஜலிஸ்டா வினோலிசன்

இறையழைத்தல் இல்லாமல் தமக்கு தாமே பட்டம் சூட்டி, கர்வத்தோடு வாழ்வோர் அழிவது உறுதி.

கிதியோனின் புதல்வர்களுள் ஒருவரான அபிமெலெக் சூழ்ச்சியாக தலைவனான். தலைவனான அவன் தன் சகோதரர்கள் எழுபதுபேரை கொன்றான். கிதியோனின் கடைசிமகன் யோத்தாம் மட்டும் தப்பிவிட்டார். முரடனான அபிமெலேக் மூன்று ஆண்டுகள் கொடுங்கோல் ஆட்சி புரிந்தான். ஒருநாள் மலைக் கோட்டைக்குள் இருந்த மக்களை தாக்க கர்வத்துடன் சென்றான்.



கோட்டையின் மேல் இருந்து, பெண் ஒருத்தி அம்மிக்கல்லை நேராக அபிமெலெக் மேல் போட, தலை பிளந்து விழுந்தான்.



பெண்ணின் கையால் தாம் இறந்தால் தமக்கு அவமானம் என்று, அருகில் இருந்த வீரனிடம் தம்மை வாளால் வெட்டிக் கொன்றுவிடச்சொல்லி தம் உயிரை மாய்த்துக் கொண்டான்.



இசக்கார் குலத்தைச் சேர்ந்த, எப்ராயிம் மலையில் சாமீரில் வாழ்ந்த பூவாவின் மகன் தோலா 23 ஆண்டுகள் நீதித் தலைவராகஇருந்தார்.



அதன்பின் கிலயாதை சேர்ந்த யாயிர், 22 ஆண்டுகள் நீதித் தலைவராக விளங்கி -னார்.

18 ஆண்டுகளாக அம்மோனியரின் பிடியில் இருந்த இஸ்ரயேலை மீட்க இறைவன் தேர்ந்தெடுத்த வலிமை வாய்ந்த வீரர் இப்தா ஆவார்.







ஆண்டவர் அம்மோனியரை வெல்ல துணை செய்தால், தாம் வெற்றி பெற்றபின் தாம் முதலில் காண்பவரை பலியிடுவதாக இப்தா நேர்ந்து கொண்டார். அவ்வாறே வெற்றியோடு செல்கையில் முதலில் எதிர்பட்ட தம் ஒரே மகளையே பலியிட்டார்.



அவர்கள் நீதியை எட்டிக்காயாய் மாற்றுகின்றார்கள்.

# குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

### மேலிருந்து கீழ்

1 : இயேசுவிற்கு பதிலாக இவனை விடுவிக்கும்படி யூதர் கூக்குரலிட்டனர்.

3 : தங்க ஆபரணங்களுக்கு வைக்கப்படும் விலை மதிப்புள்ள கற்களில் ஒன்று

6 : " கை " என்றும் சொல்லலாம்.

16 : இறைவனை இப்படியும் அழைப்பர்.

26 : ஆலயத்தில் ஒலிப்பது.

29 : இயல், இசை, நாடகம் இதன் வகையாகும்

30 : எமது கோரிக்கைகளை இவ்வாறு சமர்ப்பிக்கலாம் (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

1 - இவை விதைப்பதோ அறுப்பதோ களஞ்சியங்களில் சேர்ப்பதோ இல்லை

5 - அக்காலத்தில் பாவிகள் என்று அழைப்போரை இதனால் எரிந்து கொல்வர். (இடம்மாறியுள்ளது)

13 - கானான் தேசத்தில் வழிந்தோடுவது இவையாகும். (இடம்மாறியுள்ளது)

25 - "தொண்டு " என்றும் கூறலாம்.

26 - இயேசுக்கிறிஸ்து தம்மைத்தாமே வெளிப்படுத்தும் பெயர். (இடம்மாறியுள்ளது)

35 - மத்தேயு 5ஆம் அதிகாரத்தில் இந்த பிரசங்கம் உண்டு (இடம்மாறியுள்ளது)

## குறுக்கெழுத்துப்போட்டி
**முன்னைய இதழின் விடைகள்**

### மேலிருந்து கீழ்

1. யோவான்
3. தானியேல்
6. கடைசி
11. உண்மை
20. வலது
25. படி
30. சிலை

### இடமிருந்து வலம்

1. யோர்தான்
11. உடை
17. கண்
20. வல்லமை
25. பல
31. துடிப்பு

## "தாய்" வாசக நெஞ்சங்களே!

**தற்போது "தாய்" சஞ்சிகையை www.colombostjosephvazmandram.lk என்ற இணையதளத்தின் ஊடாகவும் நீங்கள் காணலாம் என்பதை அறியத் தருகின்றோம். இதன்மூலமாக வெளிநாட்டில் உள்ளவர்களும் இத் தாய் சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.**

**இயேசுக் கிறிஸ்துவின் வருகைக்கு நாம் அனைவரும் ஆயத்தமாவோம்!!!**





## பொதுக்காலத்தின் கடைசி...

12ம் பக்க தொடர்ச்சி...

❍முதலாவதாக,
நமது கிறிஸ்து அரசர் தலைசிறந்த தலைவர். ஒரு அரசர் அல்லது தலைவர் என்பவர் தனது உயிரை ஈந்தாவது அல்லது பணையம் வைத்தாவது தனது தொண்டர்களையும் மக்களையும் காப்பாற்ற வேண்டும். நெருக்கடியான வேளையில் அவர்களை கைவிட்டு விட்டு ஓடிவிடக்கூடாது. நமது கிறிஸ்து அரசர், எல்லாவகையான துன்பங்களையும் சவால்களையும் ஏற்றுக்கொள்வதில் தன்னை முன்னிலைப்படுத்திக்கொண்டார்.

❍இரண்டாவதாக,
நமது கிறிஸ்து அரசர் மக்களின் துயரங்களைச் சுமப்பவர். இதைத்தான் எசாயா புத்தகத்தில் (துன்புறும் மெசியா பகுதியில்) காண்கின்றோம்.

❍மூன்றாவதாக,
நமது கிறிஸ்து அரசர் வேறுபாடுகள் களைந்து எல்லோரையும் ஒன்றிணைப்பவர். உயர்மட்டத்தில் இருக்கும் வல்லாதிக்க நாடுகளின் தலைவர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும், பெரும்பண முதலாளிகளுக்கும், ஆதிக்க வர்க்கத்தினருக்கும் முன்னுரிமைக் கொடுத்து அவர்களுக்குச் சிவப்பு கம்பளம் விரித்து பெரும் மரியாதைத் தரும் நம் உலகத்தலைவர்கள் மத்தியில் கிறிஸ்து அரசர் வித்தியாசமாகச் செயல்படுகிறார்.

"அரசர் எவ்வழியோ குடிமக்களும் அவ்வழியே" என்ற வாக்கிற்கிணங்க, ஒரு உண்மையான அரசருக்கு உரிய முறையில் பண்பு நலன்களைக் கொண்டு முன்மாதிரியான அரசராக என்றென்றும் வாழும் நமது ஆண்டவர் இயேசுவின் வழியில் ஒன்றிணைந்து பயணிப்போம். கிறிஸ்து அரசருக்காகத் தனது உயிரையே கையளித்த மிகுவேல் ப்ரோவைவின் வழியில் நாமும் "கிறிஸ்து அரசர் என்றென்றும் வாழ்க!" என்று அறிக்கையிட்டு சான்று வாழ்வு வாழ்வோம். அதற்கான அருளை நமது ஒப்பற்ற அரசராம் கிறிஸ்து இயேசுவிடம் இறைஞ்சுவோம்.

*தொகுப்பு. நோபட்*

*நன்றி://www.வத்திக்கான் இணையத்தளம்.com*

# தூய இயூஜினின் தாகத்தில் தாய் மரி

**சென்ற இதழின் தொடர்ச்சி....**

இவ்வாறு அன்னை மரியும் இயூஜின் டி மசனட்டின் விசுவாசத் தாகத்தை அறிந்தவராய் அவரது பயணத்தில் துணை நிற்பதை அவரது வாழ்க்கை குறிப்பை தியானிப்பதன் மூலம் அறிந்து கொள்கின்றோம். இன்னுமாக தாய் மரியினுடைய தாய்மை எவ்வாறு தூய இயூஜினின் வாழ்வில் பிரதிபலித்தது என்று பார்ப்போம் ஆனால், ஒரு காலகட்டத்தில் புனித இயூஜின் அடிகள் நோய்வாய்ப்பட்டு கடின அவஸ்தைக்கு உட்பட்டு இருந்தபொழுது இயூஜின் டி மசனட் உருவாக்கிய இளைஞர் குழு அன்னை மரியின் சுரூபத்திற்கு அவரை முழுவதுமாக ஒப்புக் கொடுத்து உருக்கமாக வேண்டினர். அப்பொழுது புனித இயூஜின் அன்னை மரியின் தாய்மையின் அன்பினால் குணம்பெற்று தன் வாழ்வில் மரி அன்னையை அனுபவித்தார். இதன் சான்றாக இன்று அந்த சுரூபம் பிரான்ஸ் நாட்டிலே பேணி பாதுகாக்கப்படுகிறது. இவ்வாறாக ஏராளமான விடயங்கள் மூலம் அற்புதங்கள் மூலம், அன்னை மரி புனித இயுஜின் வாழ்வில் இருக்கின்றார் என்பதை நாம் அறிந்திருக்கின்றோம்.

இவ்வாறு தான் எம் ஒவ்வொருவருடைய வாழ்வும் மரியன்னையினால் தினம் தினம் அலங்கரிக்கப்பட்டு நாமும் அவரது அன்பில் நனைய பல சந்தர்ப்பங்கள் தரப்படுகின்றது. தூய இயூஜின் அடிகள் தனது தாகத்தை தணிக்க எவ்வாறு அன்னை மரியை இறுகப்பிடித்தாரோ, நாமும் எமது அன்றாட வாழ்வில் ஏற்படும் தாகங்களை நிவர்த்தி செய்ய அன்னையின் கரம் பிடிப்போம். தீராத் தாகத்தோடு நன்மைக்காக உழைக்கின்ற எந்தவொரு ஆன்மாவும் தாகம் தணியாமல் உறங்குவதில்லை. வற்றாத நீர் சுணைகளாக எம் வாழ்வை மரியன்னையின் துணையுடன் மாற்றி என்றும் புனித இயூஜின் அடிகள் கொண்டுள்ள துணிச்சல் மிக்க அன்போடு எம் வாழ்வுப் பயணத்தை தொடங்குவோம்.



**தாகங்கள் பல விதமாக இருப்பினும் தாகம் தீர்ப்பதற்கான வழி அன்னை மரியே!**

**முற்றும்.**

அருட்சகோதரர். த.அனோஷன் பேட்ரம் (அ.ம.தி)

இதோ! இவளே என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள்.


Nixon Miralee
Quality is Everyone's Responsibility
Nixon Miralee
NM







"மறை வளர ஒன்றிணைவோம்"

இச்சஞ்சிகை அருட்பணி. ஆனந்த பெர்னாண்டோபுள்ளே அடிகளாரால் 15.11.2024 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

*Printed by : JRCA Digital Graphic (Pvt) Ltd., No. 78, Brass Founder Street, Colombo - 13. :077 177 6646 : 075 777 6646*